# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 4 July 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 18

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 19

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 21

பூரணயோகம் - முதல் வாயில்கள் 25

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 27

வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . 29

பாதுகாப்பு . . . . . . . . . . . . . . . . 31

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 40

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 47

**அன்னை இலக்கியம்**

பார்வைகள். . . . . . . . . . . . . . . . 50

ஜீவியத்தின் ஓசை

மலர்ந்த முகம்

ஆழ்ந்த வியாதிக்கு

எதிரி

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேகப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 277
Para 7

In the latter alternative we find the secret we are seeking.
We find the means of the transition.
We find the needed step towards a supramental transformation.
For we perceive a graduality of ascent.
We perceive a communication with a deeper and more immense light.
It is a light and power from above.
We perceive a scale of intensities.
They can be regarded as so many stairs in the ascension of Mind.
Or they are a descent into Mind from That which is beyond it.
We are aware of a sealike downpour of masses of a spontaneous knowledge.
It assumes the nature of Thought.
We are accustomed to a process of thought.
But it has a different character.
For there is nothing here of seeking.
There is no trace of mental construction.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

பிந்தையதில் நாம் நாடும் ரகசியம் நமக்குப் புலப்படுகிறது.
நிலை மாற்றத்திற்கான வழி நமக்குத் தெரிகிறது.
சத்திய ஜீவியத் திருவுருமாற்றத்தை அடையத் தேவையான கட்டத்தை நாம் கண்டறிகிறோம்.
அங்குப் படிப்படியான ஏற்றத்தை நாம் உணர்கிறோம்.
ஆழ்ந்த, மிகப் பெரிய ஒளியின் தொடர்பு நமக்குத் தெளிவாகிறது.
அது மேலிருந்து இறங்கும் ஒளி மற்றும் சக்தி.
தீவிரம் படிப்படியாக உள்ளதை உணர்கிறோம்.
அவை மனத்தின் உயரும் நிலைகளுக்கான பலவிதமான படிகள் என்று நாம் கருதலாம்.
அல்லது அவை மனத்தைக் கடந்த சத்திய ஜீவியத்திலிருந்து மனத்தினுள் இறங்கும் நிலைகள் ஆகும்.
இயல்பான ஞானம் திரண்டு கடலாகப் பொழிவதை நாம் அறிகிறோம்.
இது எண்ணத்தின் தன்மையை மேற்கொள்கிறது.
எண்ணத்தால் செயல்படுவது நமக்குப் பழக்கமாக உள்ளது.
ஆனால் அதன் இயல்பு மாறானது.
இங்கு நாடுவது ஏதுமில்லை.
மனம் உருவகப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

There is no labour of speculation or difficult discovery.

It is an automatic and spontaneous knowledge.
It is from a Higher Mind that seems to be in possession of Truth.
It is not in search of hidden and withheld realities.

One observes that this Thought is much more capable than the mind.
It is capable of including at once a mass of knowledge in a single view.
It has a cosmic character.
It is not the stamp of an individual thinking.
Beyond this Truth-Thought we can distinguish a greater illumination.
It is instinct with an increased power and intensity.
It has a driving force.
It has a luminosity of the nature of Truth-Sight.
Its thought formulation is a minor and dependent activity.

In this experience the Vedic image of the Sun of Truth becomes a reality.
We can accept that image.
We can compare the Higher Mind's action to a composed and steady sunshine.
The Illumined Mind's energy beyond is like an outpouring.



முனைந்த யூகம் அல்லது கடினமான கண்டுபிடிப்பும் அங்கு இல்லை.
அது தானாகச் செயல்படும் இயல்பான ஞானம்.
இது சத்தியத்தை தன்னகத்தே கொண்டுள்ள உயர்ந்த முனிவர் மனத்திலிருந்து எழுவது.
அங்கு மறைத்துத் திரையாக வைக்கப்பட்டுள்ள சத்தியத்தைத் தேடும் நிலையில்லை.
இந்த நிலைக்குரிய எண்ணம் மனத்தைவிட அதிகத் திறன் வாய்ந்தது என்பதை நாம் காண முடிகிறது.
ஒரே பார்வையில் ஞானத்தைத் திரளாகச் சேர்க்கும் திறன் உடையது அது.
அது பிரபஞ்சத் தன்மை கொண்டது.
தனிப்பட்டதன் சிந்தனைக்கான முத்திரை அதுவல்ல.
இந்தச் சத்திய எண்ணத்தையும் கடந்த மற்றுமொரு சிறப்பான ஒளி விளக்கத்தை நாம் வேறுபடுத்திக் காண முடிகிறது.
அது அதிக சக்தி மற்றும் தீவிரம் கொண்ட ஒரு உள்ளுணர்வு.
அது இயக்கும் சக்தி உடையது.
அது ஞான திருஷ்டி போன்று பிரகாசமானது.
அதன் எண்ண வடிவமைப்பு ஒரு சிறிய மற்றும் சார்புச் செயலாகும்.
இவ்வனுபவம் வேத காலத்தில் சூரியனைச் சத்தியத்தின் உருவமாகக் கண்டதை உண்மையாக்குகிறது.
அந்த உருவத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.
நாம் முனிவர் மனத்தின் செயலை அமைவடக்க நிலையான சூரிய ஒளிக்கு ஒப்பிடலாம்.
அதைத் தாண்டியுள்ள ரிஷிமனத்தின் சக்தி ஊற்றாகப் பொங்கி வழியும் தன்மை கொண்டது.

It is an outpouring of massive lightnings of flaming sun-stuff.

Still beyond can be met a yet greater power of the Truth-Force.
There is an intimate and exact Truth-vision and Truth-thought.
There is a Truth-sense, Truth-feeling, and Truth-action.

To these we can give in a special sense the name of Intuition.
For want of a better word we have already used the word intuition.
We have called intuition any supra-intellectual direct way of knowing.

Yet what we actually know as intuition is only one special movement.
It is a movement of self-existent knowledge.
This new range is its origin.
It imparts to our intuitions something of its own distinct character.
It is very clearly an intermediary of a greater Truth-Light.

Our mind cannot directly communicate with it.
At the source of this Intuition we discover a superconscient cosmic Mind.
It is in direct contact with the Supramental Truth-Consciousness.



அது எரியும் சூரியப் பொருள்களின் பெருத்த மின்னல்கள் பொழிந்து சொரிவது.
இதையும் தாண்டிய நிலையில் உள்ள அதிகத் திறன் வாய்ந்த சத்தியத்தின் சக்தியை நாம் சந்திக்க முடியும்.
அங்கு நெருக்கமான மற்றும் துல்லியமான சத்திய திருஷ்டி மற்றும் சத்திய எண்ணம் உண்டு.
அங்குச் சத்திய அறிவு, சத்திய உணர்வு மற்றும் சத்தியச் செயல் உண்டு.
இவைகளை நாம் சிறப்பான பொருள்படுமாறு, உள்ளுணர்வு - யோகி மனம் - என்று அழைக்கலாம்.
சிறந்த வார்த்தையைப் பயன்படுத்த நாம் உள்ளுணர்வு என்ற சொல்லை ஏற்கனவே உபயோகப்படுத்தினோம்.
உள்ளுணர்வு என்ற பதத்தால் எல்லாவிதமான அறிவாற்றலையும் கடந்த நிலையிலுள்ள நேரடியாக அறியும் திறனைக் குறிப்பிட்டோம்.
இருந்தாலும் உள்ளுணர்வு என்று நாம் அறிவது ஒரே ஒரு சிறப்பாக இயங்கும் நிலை.
அது சுயமாக உள்ள ஞானத்தின் இயக்கம்.
இப்புதிய வரிசைத்தொடர் அதன் பிறப்பிடம்.
அது தன் தனிச்சிறப்பியல்பை நம் உள்ளுணர்வுக்குத் தெரிவிக்கிறது.
அது மிகப் பெரிய சத்திய ஒளியின் இடைநிலையாக உள்ளது என்பது மிகத் தெளிவானது.
நம் மனம் அதோடு நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது.
இவ்வுள்ளுணர்வின் பிறப்பிடத்தில் நாம் ஒரு உயர்ந்த பிரபஞ்ச மனத்தைக் காண்கிறோம்.
அது சத்திய ஜீவியத்தோடு நேரடித் தொடர்பில் உள்ளது.

That Cosmic Mind is an original intensity.

It determines  all movements below it.

It determines  all mental energies.

It does not determine Mind as we know it.

It is an Overmind that covers this whole lower hemisphere of Knowledge-Ignorance.

It covers it as with wide wings of some creative Oversoul.

It links it with that greater Truth-Consciousness.

Yet at the same time it veils the face of the greater Truth.

It veils this Truth from our sight with its brilliant golden Lid.

It intervenes with its flood of infinite possibilities.

It is at once an obstacle and a passage in our seeking.

The spiritual law of our existence is its highest aim, its secret Reality.

This then is the occult link we were looking for.

This is the Power that at once connects and divides.

It connects and divides the supreme Knowledge and the cosmic Ignorance.



அப்பிரபஞ்ச மனம் ஒரு மூலமுதலான சக்தியாகும்.

அதன் கீழுள்ள அனைத்து சலனங்களையும் அது நிர்ணயம் செய்கிறது.

அது எல்லா வகையான மனத்தின் சக்திகளையும் நிர்ணயம் செய்கிறது.

அது நிர்ணயம் செய்யும் மனம் நாமறிவது போன்றதல்ல.

அது கீழுள்ள அரைக்கோளத்தின் அறிவு, அறியாமை இரண்டையும் உள்ளடக்கியுள்ள தெய்வீக மனம்.

அது படைப்பாற்றல் கொண்ட ஓர் உயர்ந்த ஆத்மாவின் பரந்த சிறகுகள் போல் அதை மூடியுள்ளது.

அதை உயர்ந்த சத்திய ஜீவியத்துடன் இணைக்கிறது.

ஆனாலும் அதன் முகப்பை திரையிட்டு வைக்கிறது.

இச்சத்தியத்தை அது ஒளிமயமான பொன் மூடியால் தடுத்து நம் பார்வையிலிருந்து மறைத்து வைக்கிறது.

அதன் அனந்தமான சாத்தியக்கூறுகளின் சாகரத்தை இடைமறித்து நிற்கிறது.

அது மனித ஆர்வத்திற்குத் தடையாகவும், அதே நேரம் ஆர்வத்தை வழி நடத்தும் பாதையாகவும் உள்ளது.

தெய்வீக வாழ்வு அதன் உயர்ந்த லட்சியம், அதன் மறைபொருளான சத்தியம்.

இதுவே நாம் இதுவரை தேடிய அதி ரகசியமான தொடர்பு.

இது ஒரே நேரத்தில் தொடர்பை ஏற்படுத்தும் சக்தியாகவும் பிரிக்கும் சக்தியாகவும் உள்ளது.

உயர்ந்த ஞானம் மற்றும் பிரபஞ்ச அஞ்ஞானத்தைச் சேர்க்கிறது மற்றும் பிரிக்கிறது.

Page 278
Para 8

In its nature and law the Overmind is a delegate of the Supermind Consciousness.

It is its delegate to the Ignorance.

Or we might speak of it as a protective double.

It is a screen of dissimilar similarity.

Through it the Supermind can act indirectly on the Ignorance.

The Ignorance's darkness could not bear the direct impact of a supreme Light.

The luminous Overmind corona was projected into the Ignorance.

By that, the diffusion of a diminished light in the Ignorance was made possible.

Through that projection, the contrary shadow of the Inconscience was made possible.

The Inconscience swallows up in itself all light.

Supermind transmits to Overmind all its realities.

But it leaves it to formulate them according to an awareness of things.

That awareness is still a vision of Truth.

It is yet at the same time a first parent of the Ignorance.



அதன் இயல்பிலும் சட்டத்திலும் தெய்வீக மனம் சத்திய ஜீவியத்தின் பிரதிநிதி.

இது அதன் அறியாமையின் பிரதிநிதி.

அல்லது நாம் அதை இரட்டைக்காப்பு என்று அழைக்கலாம்.

அது வேற்றுமையான ஒற்றுமையின் திரை.

அதன் மூலம் சத்திய ஜீவியம் அறியாமையின் மீது மறைமுகமாகச் செயல்பட முடியும்.

அறியாமையின் இருள் அவ்வொப்புயர்வற்ற ஒளியின் நேரடி விளைவைத் தாங்கிக் கொள்ள முடியாது.

ஒளிரும் தெய்வீக மனத்தின் ஒளி வளையம் அறியாமைக்குள் வெளிப்பட்டுள்ளது.

அதனால், குறுக்கப்பட்ட ஒளி அறியாமையில் பரவுவது சாத்தியமானது.

அவ்வெளிப்பாட்டால், அதற்கு நேர் மாறான ஜட இருளின் பிம்பம் எழ முடிந்தது.

ஜட இருள் எல்லா ஒளியையும் தன்னுள் கிரகிக்கிறது.

சத்திய ஜீவியம் அதன் அனைத்து சத்தியங்களையும் தெய்வீக மனத்திற்கு அனுப்புகிறது.

ஆனால் அவற்றின் வடிவமைப்பை தெய்வீக மனத்திடம் அதன் உணரும் நிலைக்கேற்ப மேற்கொள்ளும் வகையில் விட்டுவிடுகிறது.

அத்தகைய உணரும் நிலையும் சத்தியத்தைக் காணும் திறன் கொண்டதாகும்.

இருந்தாலும் அதே சமயத்தில் அதுவே அறியாமையின் முதல் காரணகர்த்தாவாகிறது.

A line divides Supermind and Overmind.

It permits a free transmission.
It allows the lower Power to derive from the higher Power all it holds or sees.
But it automatically compels a transitional change in the passage.
The  Supermind's integrality keeps always the essential truth of things.
It keeps the total truth and the truth of its individual self-determinations clearly knit together.

It maintains in them an inseparable unity.

It maintains between them a close interpenetration.

It maintains a free and full consciousness of each other.

But in Overmind this integrality is no longer there.
And yet the Overmind is well aware of the essential Truth of things.
It embraces the totality.
It uses the individual self-determinations.
But it is not limited by them.
It knows their oneness, and can realise it in a spiritual cognition.
It does rely on that oneness for its security.



சத்திய ஜீவியத்தையும் தெய்வீக மனத்தையும் ஒரு கோடு பிரிக்கிறது.
அது சுதந்திரமான சக்தி பரிமாற்றத்தை அனுமதிக்கிறது.
அது தான் எதைப் பற்ற அல்லது பார்க்க முடிகிறதோ அதை தாழ்ந்த சக்தி உயர்ந்த சக்தியிலிருந்து பெற அனுமதிக்கிறது.
ஆனால் அத்தகைய பரிமாற்றத்தின் போது ஒரு தாற்காலிக-மான நிலை மாற்றத்தை அது இயல்பாக வற்புறுத்துகிறது.
சத்திய ஜீவியத்தின் ஒருங்கிணைந்த நிலை சத்தியத்தின் சாரத்தை எப்போதும் பெற்றுள்ளது.
அது, பூரண சத்தியம் மற்றும் அதன் தனிப்பட்ட சுயநிர்ணயங்களின் சத்தியம் இவற்றைத் தெளிவாக ஒன்றோடொன்று பிணைக்கப் பெற்றுள்ளது.
அது அவைகளில் பிரிக்க முடியாத ஒற்றுமையை நிலைநிறுத்துகிறது.
அது அவைகளிடையே நெருக்கமாக ஊடுருவும் நிலையைப் பராமரிக்கிறது.
அது அவற்றிடையே சுதந்திரமான மற்றும் முழுமையான ஜீவியப்பரிமாற்றத்தை நிலைக்கச் செய்கிறது.
ஆனால் தெய்வீக மனத்தில் இந்த ஒருங்கிணைதல் இல்லை.
இருந்தாலும் தெய்வீக மனம் அடிப்படைச் சத்தியத்தை நன்கு அறிந்துள்ளது.
அது முழுமையைத் தழுவியுள்ளது.
அது தன் சொந்த சுயநிர்ணயங்களைப் பயன்படுத்துகிறது.
ஆனால் அது அவற்றால் கட்டுப்படுத்தப்படாது.
அவற்றின் ஒருமையை அது அறிந்துள்ளது, அதை அதன் ஆன்மிக அறிவில் அது அடைய முடியும்.
அது தன் பாதுகாப்பிற்கு அந்த ஒருமையை நம்பியுள்ளது.

Yet its dynamic movement is not directly determined by that oneness.
Overmind Energy proceeds through a capacity of separation and combination.
It separates and combines the powers of the integral indivisible Unity.
It takes each Aspect or Power.
It gives to it an independent action.
In that action it acquires a full separate importance.

It is able to work out its own world of creation.
Purusha and Prakriti are the Conscious Soul and executive Force of Nature.
They are a two-aspected single truth in the supramental harmony.
They are being and dynamis of the Reality.
There can be no disequilibrium or predominance of one over the other.
In Overmind we have the origin of the cleavage.
There is the trenchant distinction made by the philosophy of the Sankhyas.
In that they appear as two independent entities.

Prakriti is able to dominate Purusha.
It clouds its freedom and reduces its power.

Purusha is reduced to a witness and recipient of her forms and actions.



இருந்தாலும் அவ்வொருமை அதன் செயல்பாட்டை நேரடியாக நிர்ணயிப்பது இல்லை.
தெய்வீக மனத்தின் சக்தி பிரிதல் மற்றும் இணைதல் எனும் திறனால் செயல்படுகிறது.
அது ஒருங்கிணைந்த பிரிக்க முடியாத ஒருமைப்பாட்டின் சக்திகளைப் பிரிக்கிறது மற்றும் சேர்க்கிறது.
அது ஒரு அம்சம் அல்லது சக்தியை எடுத்துக் கொள்கிறது.
அதற்கு ஒரு சுதந்திரமான செயலைத் தருகிறது.
அச்செயலில் அது முழுமையான தனியான முக்கியத்துவத்தைப் பெறுகிறது.
தனக்குச் சொந்தமான உலகின் சிருஷ்டியைத் திட்டமிடுகிறது.
புருஷன் பிரகிருதி என்பவை தன்னையறியும் ஆத்மா மற்றும் செயலை நிறைவேற்றும் இயற்கையின் சக்தி.
சத்திய ஜீவிய சுமுகத்தில் அவை இரண்டு அம்சமான ஒரு சத்தியம்.
அவை சத்தியத்தின் ஜீவன் மற்றும் அதன் இயக்க சக்தி.
அங்கு ஒன்றைவிட ஒன்று சமநிலையின்மை அல்லது மேலோங்கிய தன்மை இருக்க முடியாது.
தெய்வீக மனத்தில் அவற்றின் பிரிவுக்கான ஆரம்பம் உள்ளது.
சாங்கியம் இவற்றை வெகுவாகப் பிரிக்கிறது.

அங்கு அவை இரு சுதந்திரமான அமைப்புகளாகத் தோன்றுகின்றன.
பிரகிருதி புருஷன் மீது ஆதிக்கம் செலுத்த முடிகிறது.
இது புருஷனின் சுதந்திரத்தை மறைக்கிறது மற்றும் அதன் சக்தியைக் குறைக்கிறது.
புருஷன் சாட்சிப் புருஷனாக குறைக்கப்படுகிறது மற்றும் பிரகிருதியின் ரூபங்கள் மற்றும் செயல்களைப் பெறுபவனாகிறது.

Purusha is able to return to its separate existence.
There it abides in a free self-sovereignty.
It does this by rejection of her original overclouding material principle.
It is so with the other aspects or powers of the Divine Reality.
They are One and Many, Divine Personality and Divine Impersonality.
Each is still an aspect and power of the one Reality.

But each is empowered to act as an independent entity in the whole.
Each is capable of its separate expression.

And each develops the dynamic consequences of that separateness.
At the same time in Overmind this separateness remains.

It is still founded on the basis of an implicit underlying unity.

All possibilities of combination are there.

The relations between the separated Powers and Aspects are freely organized.
All interchanges of their energies and their actuality are always possible.

Contd...



புருஷன் அதன் தனித்த வாழ்விற்கு மீண்டும் திரும்புகிறது.
அங்கு அது சுதந்திரமான சுயாதிபத்தியத்தில் இருக்கும்.
தன்னை மறைக்கும் பிரகிருதியை விலக்கும் தத்துவத்தின் வழி இதைச் செய்கிறது.
இறை சத்தியத்தின் மற்ற அம்சங்கள் அல்லது சக்திகளிலும் இதே தத்துவம் செயல்படுகிறது.
அவை ஏகன் மற்றும் அநேகன், இறைவனின் தனித்தன்மை மற்றும் பொதுத்தன்மை போன்றவை.
ஆனாலும் ஒவ்வொன்றும் அந்த ஒரு சத்தியத்தின் அம்சம் மற்றும் சக்தி.
ஆனால் ஒவ்வொன்றும் தனித்தனியான அமைப்பாக முழுமையில் செயல்படும் உரிமையைப் பெற்றுள்ளன.
ஒவ்வொன்றும் தன்னை தனித்ததாக வெளிப்படுத்தும் திறன் உள்ளவை.
மேலும் அத்தனித்த வெளிப்பாட்டால் சக்தி வாய்ந்த விளைவுகளையும் ஏற்படுத்தவல்லன.
அதே நேரத்தில் தெய்வீக மனத்தில் இந்தப் பிரிந்த நிலை தொடர்கிறது.
இருந்தாலும், அது இயல்பான அடிப்படையான ஐக்கியத்தை ஆதாரமாகப் பெற்றுள்ளது.
வெவ்வேறு கூட்டமைப்புக்கான அனைத்து சாத்தியங்களும் அங்கு உள்ளன.
தனித்த சக்திகள் மற்றும் அம்சங்கள் இவற்றுக்கிடையே தொடர்புகள் சுதந்திரமாக அமைக்கப்பட்டு உள்ளன.
அவற்றிடையே சக்தி மற்றும் செயல் பரிமாற்றங்கள் எப்பொழுதும் நிகழக்கூடியவை.

தொடரும்...

இம்மாதச் செய்தி

# தோன்றாத் துணை நாதன்
# அகந்தை
# அழிந்த மனம்.



## சாவித்ரி

**Page 174: Arriving at a large and shadowy sense**

*கலங்கிய புலனுணர்வை முயன்று அடைந்து*

✡ தற்செயலான தன் செயலை விளக்க முனையாது

✡ விநோதப் புதிரில் வேலை செய்யும் வாழ்வு

✡ இனிய பெருமையுடைய சூரியனை இழந்து

✡ கற்பனை உலகில், இதுவரை உண்மையைக் கண்டறியாத உலகில்

✡ சிருஷ்டியின் எல்லையில் தயங்கி மின்னும் ஒளி

✡ வழிதவறி வந்து, கனவு கண்டு, தடையின்றி சாதனை செய்து

✡ சாதனை அழிக்கும் மாய லோகக் காலம்

✡ மங்கிய மாலை நேர வியக்கும் அற்புதங்கள்

✡ பெருமையாக விளங்கும், அழகு நிறை விநோதம்

✡ கற்பனையுலகில் நிறைவு காணும் கனத்த பெருவெள்ளம்

✡ முத்திரையிட்டு மூடிய மங்கிய சிறு அடையாளங்கள்

✡ கண்ணைக் கவரும் ஆசை எழுந்து பெறும் தீவிரம்

✡ கவர்ந்த எண்ணம் கட்டாயத்தை எதிர்கொண்டது

✡ இதயத்தைக் கவர்ந்தது, முடிவை எட்ட முடியவில்லை

✡ பெருநிறைக் காட்சிகள் மந்திரமாக எழுந்தோடின

✡ பறந்து மறையும் மென்மை கொஞ்சம் தொடர்ந்து வந்தது

✡ உயர்ந்த கலையின் ஓரங்கள் பயனின்றி ஒதுங்கின

✡ உயர்ந்த நறுமண ஒளியில் கனவே கோலாக

✡ நிலையற்ற வெள்ளிப் பின்னணியில்

✡ உதய நேரம் எழும் இளம் சொர்க்க ஜோதி

✡ பெரும் தீ எழுந்து பொறியெழுப்ப மறுத்து

✡ விடியலைக் கூறும் தவழும் தென்றல்

✡ கவரும் குறையை கருத்திலமைத்து நாடி

✡ ஒளியால் பிடிபட்டு அறியாமைப் பொறியிலகப்பட்டு

✡ தெய்வலோக ஜீவன்கள் உடலால் உந்தப்பட்டு

✡ தெரியாத சிறகை அடித்து, இலட்சிய லோகத்தை நாடி

✡ சிறு வாழ்வின் மகிழ்வை பெருவேகமாக நாடி

✡ சிருஷ்டிக்கப்பட்ட மண்ணில் பாதம் படமுடியாத தெய்வம்

✡ அழிபவற்றை அணைத்து அதன் வாழ்வில் பங்கு கொண்டு

✡ உடலற்ற பிரகாசம் பெற்றெடுத்த பிண்டங்கள்

✡ உருவமற்ற ஆன்மாவில் உதித்தெழுந்தது போல்

✡ அழியாத ஆசை ஆர்வமாக விரட்ட

✡ பார்வை பரவும் பல இடங்களிலும் நடந்து

✡ முயற்சியற்ற உறுதி தவறியது, இங்கு பலித்தது

✡ வாழ்வு பெரும் ஆராய்ச்சி, முடிவு காணவில்லை

## ஜீவிய மணி

*எந்த நிலையிலும் அழைப்பு அடுத்த நிலைக்கு அழைத்துப் போகும்.*



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/21. ஜீவன் பிறரைக் கொண்டு பிரியமாகத் தன்னை அறிவது சுமுகம்**

- யோகி எதிலும், எவரிலும் பிரம்மத்தைக் காண்கிறான்.
- *மனிதன் எந்த மனிதனிலும் தன்னையே காண்கிறான்.*
- நாம் பெரிய மனிதன் பக்கத்தில் நின்றிருந்தால் நம்மவர்க்கே அது தெரியாது.
- ஒருவரைப் பார்க்கப் போய் அவர் சொல்வதைக் கேட்க ஆரம்பித்து அவர் முடிக்கும்வரை காத்திருந்தால் ஒரு மணி நேரம் பேசி விட்டு ''இது நல்ல உரையாடல்'' என்று கூறிவிட்டு நாம் சொல்ல வந்ததைக் கேட்காமலேயே போய் விடுவார்.
- வரன் வீட்டில் பெண் பார்க்க வந்து, சீதனம் கேட்காமல், அவர்களே எல்லாச் செலவையும் செய்தால் பெண் வீட்டார் ஒரு நல்ல வார்த்தையும் சொல்லாவிட்டால் அவர்கள் நல்லவர்கள், பல குறைகள் சொல்வது இயல்பு.

  *பிள்ளை வீட்டார் பெருந்தன்மை அரிது.*
- மனிதன் சுயநலமி, பண விஷயத்தில் கருமி, மற்ற விஷயத்தில் அல்பம், தாழ்ந்த நிலையிலிருந்தாலும் தன்னை உயர்வாகக் கருதுவது பெரும்பாலோரில்லை, ஒருவர் தவறாமல் செய்வது என்று நினைப்பதும் சிரமம். அதுவே உண்மை.
- *வந்த நண்பர் மூன்று நாட்கள் வீட்டிலிருந்தவர் சில நிமிஷமும் அடுத்தவரைப் பேச அனுமதிக்கவில்லை என்பது மௌனமானவர் அனைவருடைய அனுபவம். இதை ஏற்பது மற்றவர்க்குக் கடினம்.* விருந்தாளி பலமாக மறுப்பார்.

**இவை சுய நலத்தின் சுயரூபம்.**

- மனிதனுக்கு உலகில் மற்றவர் உண்டு என காரியம் வரும்பொழுது ஏற்க முடியாது.
- *பிறரை அறிவது, பிரியமாக அறிவது, அவரைக் கொண்டு தன்னையறிவது ஆன்மிகம்.*
- தத்துவ பாஷையில் மனித ஆத்மா, பிரபஞ்ச ஆத்மாவாவது யோகத்தில் முதற்கட்டம். பிரபஞ்ச ஆத்மாவாக பிரபஞ்சத்தில் எல்லா ஆத்மாக்களுடன் ஐக்கியமாக வேண்டும்.
- அடுத்தவருடன் சேரும்முன் தான் தன்னையறிய வேண்டும். அடுத்தவர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் எனக் கண்டு கொள்ள வேண்டும். அதை அறிய அவர் மீது பிரியம் எழ வேண்டும்.

**பிரியம் உணர்வால் அடுத்தவருடன் ஒன்றச் செய்யும்.**

- நாம் மனம், ஆத்மா என்றெல்லாம் படிக்கிறோம்.
- நடைமுறையில் மனிதன் மனமில்லாதவனாகவும் இருப்பது உண்டு.
- உணர்வுமில்லாமல் வெறும் உடலாகவே இருப்பதுண்டு என நாம் கண்டால் நாமெப்படியிருக்கிறோம், மனமா, உயிரா, உடலா என நாம் நம்மை முதலில் கண்டு கொள்ள வேண்டும்.
- *இவையனைத்தும் சேர்ந்த மொத்தத்தை அறிந்தால்தான் பாகுபாடு செய்து நம்மையோ, பிறரையோ அறிய முடியும்.*
- மேலே கூறியது எளிய கருத்து, அதனுள் பிரம்மமே பொதிந்துள்ளது.

**அதில் தன்னையறிவது நடவாத காரியம்.**

*அதுவும் பிறரைக் கொண்டு நம்மை அறிவது இதுவரை உலகில் நடந்திருந்தால் அதை அறிவது உதவும்.*

*இது போல் ஓர் அன்பருடன் பேசும் பொழுது அவர் கூறிய சொற்கள் மனிதனின் சுபாவத்தை விளக்கும்.* ''என் கையை வெட்டிக் கொடுக்கச் சொன்னால் செய்து விடுவேன்.



அதைப் பிரியமாகச் செய்ய வேண்டும் என்று கூறினால் அது முடியாது'' என்றார். இந்த அன்பர் சூட்சுமமானவர். முதல் முறை சமாதியில் உட்கார்ந்தபொழுது அவர் உடலை விட்டு உயிர் பிரிந்து அன்னை அறை ஜன்னலில் சென்றிருந்தது. முதல் முறை பிறந்த நாள் தரிசனத்திற்கு அன்னையை அவர்கள் அறையில் சந்தித்தபொழுது அவர் உடல் செயலிழந்து விட்டது.

அன்னை அவரைக் கண்டு பலமாகச் சிரித்தார். உள்ளே வரும்படி கை அசைத்தார்.

அன்பர் உள்ளே போனார். மீண்டும் உடல் ஸ்தம்பித்து விட்டது. மீண்டும் அன்னை கையால் அருகே வரும்படி சைகை செய்தார். அன்னை சைகை செய்யும் வரை உடல் நகர்கிறது. அன்னை முன் நமஸ்காரம் செய்து எழுந்தவுடன் தன் பார்வை அன்னை முகத்தில் உடலில் பட்ட இடமெல்லாம் தோல் சுட்டது போல் சுருங்குகிறது என்றார். சிறு வயது முதல் தன்னை ஆக்ரமித்துக் கொண்டிருந்த ஒரு தீய சக்தி தன்னை விட்டகன்றதைக் கண்டேன் என்றார். அவரைப் பாம்பு தீண்டி விட்டது. ஆஸ்பத்திரிக்கோ மந்திரவாதியிடமோ போகவில்லை. நண்பரை சந்திக்கப் போனார். அவரில்லை. அவர் வரும் வரை காத்திருந்தார். வந்தவுடன் பாம்பு தீண்டி விட்டது என்று கூறினார். நண்பர் பதறிப் போனார். *எனக்கு உங்கள் மீது நம்பிக்கை உண்டு.* உங்களிடம் சொல்வது என் பொறுப்பு என்றார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

**அவர் பிரியமாக எதுவும் தன்னால்**
**எவருக்கும் செய்ய முடியாது என்றார்.**

- அவருக்குப் பிரியமில்லாமலிருக்கலாம். மற்றவர்க்கு இருக்கலாமல்லவா?
- சூட்சுமம், ஆன்மிகம் உள்ளவர் பொதுவாக சிடுமூஞ்சி, கடுமையானவராக இருப்பார்கள். பிரியமும் ஆன்மிகமும் சேர்ந்திருப்பது குறைவு.

**இரண்டுமிருந்தால், தன்னைப் பற்றி**
**அதிகமாக நினைப்பிருக்கும்.**

- அகந்தை அழிந்தவர்க்குப் பிரபஞ்சம் சமுத்திரமாகத் தெரியும்.
- யோக முயற்சியை நாமுள்ள இடத்தில் ஆரம்பிப்பது மேற்கூறியது.
- **Self-giving** — என்று பேசிய பொழுது அதை ஏற்றவர் சில நாள் கழித்து தான் அதைப் பின்பற்றுவதாக விவரமாகக் கூறிய பொழுது தான் செய்தவை அனைத்தும், **Self-giving** என்பதை உணரும்பொழுது, தனக்கே அது பலன்படும்படிச் செய்திருப்பதை அறிந்தார்.

## ஜீவிய மணி

*கிராமத்திற்குப் பள்ளியை அவர்கள் கேட்காத பொழுது சர்க்கார் அளிக்கிறது எனில் கிராமம் கல்வி பெறுவது சர்க்காருக்கு அவசியம். கிளார்க் வேலைக்குப் போனவன் ஆபீசராகச் செலக்ட் ஆகிறான் எனில், அன்பனின் வாழ்வு ஆன்மிக முன்னேற்றம் பெறுவது அன்னைக்கு அவசியம் என நாம் அன்னையை அறிய வேண்டும். நமக்குக் கேட்கத் தெரியாத பலன்களை நமக்கு அருளாகக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளவர் அன்னை என அறிவது அன்னையை அறிவதாகும். அறிந்தபின் நம்பும் திறமை அறிவுக்கு இல்லை. சூரியன் உலகைச் சுற்றி வரவில்லை; பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று அறியும் திறன் புலன்களுக்கு இல்லை என்பது போல், அன்னையைப் பற்றி அறிந்தவற்றை நம்பும் திறன் மனத்திற்கு இல்லை. பூமி சூரியனைச் சுற்றி வருவதை அறிவால் மட்டுமே நம்ப முடியும் என்பது போல், அன்னையை இது போல் நம்ப ஆன்மாவால் மட்டுமே முடியும்.*



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 114. பிறர் மீது நல்லெண்ணம் பிரவாகமாக எழுபவருக்கு இது பலிக்கும்

- எலிசபெத்திற்கு ஜேன் மீது நல்லெண்ணம் பீறிட்டு எழும் பகுதிகளைக் கதையில் படித்தாலும் நம்ப முடியாது.
- *உணர்வால் இரட்டையராக அவள் நல்லெண்ணம் எழுகிறது.*
- ஜேனுக்கு அது இல்லை, எவரிடமும் இல்லை.
- நல்லெண்ணம் எழுவது நாளை நல்ல நாளாக்கும்.
- பூரண யோகத்தை உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகள் மீதுள்ள நல்லெண்ணம் என விவரிக்கலாம்.
- *யோகத்தில் ஆனந்தம் நல்லெண்ணமாகக் கருதப்படும்.*
- அகம் ஆனந்தமானால் புறம் அனந்தமாகும்.
- ஆனந்தம் புறத்தில் அழகு, அன்பு, சந்தோஷமாகும்.
- ஆனந்தம் முகத்தில் அழகாகவும் ஆத்மாவில் அன்பாகவும் பிராணனில் சந்தோஷமாகவும் வெளிப்படும்.
- பிறர் முகம் அழகாக மாற நினைப்பது நல்லெண்ணம்.
- பிறர் நெஞ்சம் நிறைய விழைவது நல்லெண்ணம்.
- *பிறர் ஆத்மா ஆனந்தப்பட்டு அன்பு மலர விழைவது பெரு நல்லெண்ணம்.*
- நல்லெண்ணம் மனத்திற்குரியது.
- நிறைவான நல்லெண்ணம் நெஞ்சுக்குரியது.
- அன்பரின் நல்லெண்ணம் அடுத்தவர்க்கு நல்வாழ்வு தரும்.
- சார்லட் நல்லெண்ணம் கற்பனையைக் கடந்தது.

- அவள் பெற்ற அதிர்ஷ்டம் அது போல்.
- அவள் ஜேனுக்கும், எலிசபெத்திற்கும் அளித்தது பேர் அதிர்ஷ்டம்.
- எண்ணமே கெட்டதான மனதில் நல்லெண்ணம் இயல்பாக எழுவது *திருவுருமாற்றம்.*
- புத்தர் உலகின் அனைத்து ஜீவாத்மாக்கட்கும் மோட்சம் கேட்டார்.
- அதை நினைத்துப் பார்க்க அவர் மனம் உலகளவு பெரியதாக இருக்க வேண்டும்.
- ஒருவர் சிறப்பு உலகைக் காக்கும் என்பது சாவித்ரி.
- நல்லெண்ணம் பரந்து உலகையும், ஆழ்ந்து உயிரையும் உடலையும், உயர்ந்து வானையும் தொடுவது பூரணயோக நெஞ்சத்திற்குரியது.
- ஒரு மொக்கு மலராகும்பொழுது இறைவனின் இதயம் மனிதப் பார்வையில் மலர்கிறது.
- உலகையே பிரம்மத்தின் நல்லெண்ணம் நடமாடும் நானிலமாகக் கருதலாம்.
- *நல்லெண்ணம் இருளான மனத்தை ஒளியாக மாற்றும்.*
- வறுமையை நல்லெண்ணம் செல்வமாக்கும்.
- மனிதனைத் தெய்வமாகத் திருவுருமாற்றுவது நல்லெண்ணம்.

### ஜீவிய மணி

*ஜீவன் தன் முழுமையால் நம்பிக்கையின் பலனைப்பெற முனைவது, இறைவன் வரும் தருணத்தில் நம் கற்பனையின் உச்சக்கட்ட எதிர்பார்ப்பை அடைவதற்கு வழியாகும்.*



## அஜெண்டா

## கஷ்டம் ஆசையாக இருப்பதால் மனிதன் கஷ்டத்தை உற்பத்தி செய்கிறான்

Volume 8, page 65

- நம் இன்றைய மனநிலைக்கு இது எதிரான கருத்து.
- உள் மனம், ஆழ் மனம் ஓரளவு தெரிந்தவர்க்கு இந்த உண்மை ஓரளவு விளங்கும்.
- பெரும் இலாபம் மனத்திற்கு இதமானது.
  பெரும் நஷ்டம் ஆழ் மனத்திற்கு இதமானது.
  ஆழ் மனம் நாடுவது பெரும் இன்பம்.
  பெரு இன்பம் மேல் மனத்திற்குப் பெரிய துன்பமாகத் தெரியும்.
  ஆழ் மனம் மேல் மனத்தைக் கட்டாயப்படுத்தி பெரும் துன்பத்தை நாடச் செய்து, அதனடியில் உள்ள பெரு இன்பத்தை அனுபவிக்கிறது.
  இது ஆன்மிக உண்மை, அர்ஜுனனை கிருஷ்ண பரமாத்மா கட்டாயப்படுத்தியது.
  *திரௌபதியை இந்தியாவில் எல்லா கிராமங்களும் ஆயிரமாயிரமாண்டாக வழிபடுதலுக்கு அஸ்திவாரமாக அமைந்தது சபையில் அவள் எழுப்பிய அபயக்குரல்.*
  அவள் மானம் பறிபோகும் நிலையில் மேல் மனம் அதை துரதிர்ஷ்டமாகக் காண்கிறது.
  ஆழ் மனம் அதுவே அவள் அழியாப்புகழ் பெறும் வழியென அறிகிறது.
- பரமாத்மாவின் பரம பக்தையானதால் அவள் பாரத யுத்தத்தை ஜெயித்தாள்.
- ‘அனைவர் ஆத்மாவையும் நான் ஏற்கனவே கொன்று விட்டேன். நீ அவர் உடலையே சாகடிக்க வேண்டும்’ எனக் கிருஷ்ணன் அர்ஜுனனிடம் கூறினார்.
- பாண்டவர் கிருஷ்ணனைத் திரௌபதி அழைத்தது போல் அழைக்கவில்லை.

- கிருஷ்ணன் உடனிருந்தாலும் ஆத்மாவின் அழைப்புக்கே அவன் தெய்வாம்சம் வெளிப்படும்.
- அதைச் செய்தவள் திரௌபதி.
- *திரௌபதிக்குச் சேலை வளர்ந்த நேரம் யுத்தம் வெல்லப்பட்டது.*
- 'ஆண்டவன் அவர் கையால் என்னை அடித்தபொழுது மீண்டும் அதைச் செய்ய வேண்டாம் என நான் கூறலாமா? ஆண்டவன் என்னைத் தீண்டியதை அறிவதா? அடித்தார் என அறிவதா? மீண்டும் மீண்டும் அதைச் செய்ய என் நெஞ்சம் குரலெழுப்பாதா?' என்பது ஆழ் மனத்தைக் கடந்த ஆத்ம ஞானம்.
- இதைச் சூட்சுமமாக அறிந்த மனிதன் வாழ்வில் பிரச்சனை-களை, சிக்கல்களை, சிரமங்களை, விரும்பி எழுப்புகிறான் என அன்னை கூறுகிறார்.
- உலகம் இருளில்லை, தீமையில்லை என்பதின் மறுபுறம் இச்சொல்.
- ஆத்ம நிலையை அறிவது ஆழ்மனம்.
- கண்ணுக்குத் தெரிவது சிறியது, தவறு, கஷ்டம். கண்ணுக்குத் தெரியாதது பெரியது, சரி, இன்பம்.
- எந்த நேரமும் ஆண்டவன் பேரின்பம் அனுபவிக்கும் உலகில் மனிதன் காண்பது துன்பம்.
- *பார்வைக்குத் துன்பம். அது பவித்திரமான இன்பம்.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னை அன்பன் அன்னையை அறிந்து, ஆன்மவிழிப்பால் அன்னையை நம்பி, யோகத்தை நாடாமல், வாழ்வு பூரணம் பெற முயன்றால், யோகம் வாழ்வை விளக்கும்.



## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

8. நாமே உருவாக்கிய பணம், பதவி, அதிகாரம் ஆகியவற்றிற்கு நாமே அடிமையாவதைத் தடுக்க வேண்டும். நம் கண்டுபிடிப்புகளைவிட நாமே முக்கியம் என்பதை உணர வேண்டும். இந்த உணர்வு வலுப்பெறும் அளவிற்கு வாழ்க்கை நமக்குக் கட்டுப்படும்.

மனிதனுடைய பலம் பல. பலவீனம் பலப்பல. அவற்றுள் இதுவும் ஒன்று. இவற்றுள் தலையாயவை இரண்டு. 1. மனைவி, 2. பணம். இவை தொன்றுதொட்டு நடப்பவை. நாட்டிலுள்ள 1000 தொழில்களில் சுமார் 100 தொழில்களில் மானேஜர் சொற்படி முதலாளி நடப்பான். ஓரிரு இடத்தில் முதலாளி சிரமப்பட்டு, அவதிப்படுவதைக் காணலாம். ஆண், பெண்ணை ஆள்வது பரம்பரை. இங்கிலாந்தில் 1900-வரை பெண் ஆணின் உடைமை. ஒரு கதையில் கணவன் குடித்துவிட்டு போதையில் மனைவியை ஏலம் போட்டு விற்றுவிடுகிறான். அடிக்கும் பிரம்பு கட்டை விரலைவிடப் பெரியதாக இல்லாவிட்டால் கணவனுக்கு மனைவியை பிரம்பால் அடிக்கும் உரிமையை சட்டம் கொடுத்தது. அன்று கணவன் மனைவி கிழித்த கோட்டைத் தாண்டாத நிலையை ஒரு பிஷப் வேறொரு கதையில் நிரூபிக்கிறார். இதன் பின்னாலுள்ள ஆன்மிக உண்மை என்னவென்றால் உடலால் வாழும் மண்ணாங்கட்டி மனிதன் உள்பட எல்லோருக்கும் உள்ளத்தின் உருக்கம் தேவைப்படுகிறது. அதைத் தருவது பெண், மனைவி. அதற்காக அவளுக்கு மனம் விரும்பி அடிமையாகி, அடிமையாக இருப்பதற்கு உள்ளூரப் பிரியப்படுகிறான். பணம் நாம் சிருஷ்டித்தது, உயிரற்றது. பணம் ஏற்பட்டபின் பணத்திற்கு மரியாதை வந்து விட்டது. மனிதன் அந்த மரியாதைக்கு ஆசைப்படுகிறான். பணத்திற்கு அடிமையாகிறான். இன்று உலகில் 20 ஆண்டிற்குமுன் இருந்ததைப்போல் 20 மடங்கு பணம் உள்ளது. பணம் ஐரோப்பாவில் பிரச்சனையாக, உலக

அரசாங்கம் கவிழும் நிலை எழுந்து, உலகத்துப் பேரறிஞர்கள் அனைவரும் செய்வதறியாமல் உள்ளனர். அவர்களில் இருவர் பணத்தை ஆராய்ச்சி செய்து நோபல் பரிசு பெற்றவர்கள். பட்டத்திற்கும் மனிதன் அடிமை. இதுபோல் மனிதன் உடைக்கும், உறவுக்கும், தோற்றத்திற்கும் அடிமையானவை ஆயிரம். வித்யாசாகர் கோட்டில் சாப்பாட்டைப் போட்ட கதை உலகப் பிரசித்தம்.

**Ladies and Gentlemen** என அவையை விளிப்பது பல்லாண்டு காலமாக உள்ளது. அது தோற்றம். ஜீவனில்லை. சிகாகோவில் விவேகானந்தர் தோற்றத்தை உதறித் தள்ளிவிட்டு உள்ளுறை விஷயத்தை 'சகோதர சகோதரிகளே' என்றவுடன் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. பிரசங்கம் உலகப் பிரசித்தி பெற்றது. அது ஆங்கில மோகம் கரைபுரண்டு ஓடிய நேரம். இந்தியா கிருஸ்துவ நாடாகும் எல்லையில் உள்ள நேரம். சிகாகோ பிரசங்கம் இந்திய ஆன்மிகப் பெருமையை இந்தியருக்கு எடுத்துக் காட்டியது. அன்னிபெஸண்ட் அம்மையார் ரஷ்ய மாதைப் பின்பற்றி சென்னை வந்து இந்து மதப் பெருமைகளை ஏற்று **Theosophy** என்ற தத்துவத்தை எடுத்துக் கூறிய காலம். இவ்விருவரின் முயற்சியும் — விவேகானந்தரும், தியசாபிக்கல் சொஸைட்டியும் — இந்தியா கிருஸ்துவ நாடாவதைத் தடுத்தன என்கிறார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

மனிதன் மனத்தால் செயல்படவில்லை. உணர்வால் செயல்படுவதால் இந்த அவலம் ஏற்படுகிறது. இதுபோன்ற பட்டியலைத் தயாரித்து முழுமைப்படுத்தி சிந்தனை செய்பவர் எவரும் சிந்தனையாளராவர். அப்படிப்பட்டவர் உலகப் பிரச்சனைகட்குத் தீர்வு கூறக் கூடியவர். அப்பட்டியலில் பணம், பெண், பட்டம், உடை, சட்டம், ஊர் அபிப்பிராயம், ஜாதி, திருமணம், ஜனநாயகம், பொருளாதாரம், அரசியல் தோற்றம், வயது, பீடம், ஐ.நா. அமைப்பு என்பவை அடங்கும். பட்டியல் ஆயிரமானாலும் முடியாது.

(தொடரும்)



## பாதுகாப்பு

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவு ஆற்றியவர்: திருமதி உஷா ராமதாஸ்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: டிசம்பர் 15, 2014

வாழ்க்கையென ஆரம்பிப்பது ஆயுள் எனப்படும். உயிர் வாழ்வது ஆயுள். அதற்குரிய பாதுகாப்பைச் சிறு வயதில் தாயாரும் குடும்பமும் தரும். வீட்டை விட்டு வெளியே போய் வாழ வீட்டில் கற்றுக் கொண்டவனுக்குச் சுய பாதுகாப்புண்டு. இது இல்லாத சிறுவர்கள் குளம், குட்டையில் விழுவார்கள். விபத்தில் சிக்குவார்கள். இரண்டும் உடலுக்குத் தேவையான பாதுகாப்பு. *அடுத்தது உயிருக்குத் தேவையான பாதுகாப்பு.* உயர்ந்த இளைஞர்கள் அமைதியாக இருப்பார்கள். அவர்களைப் பல சிறுவர்கள் நாடுவார்கள். *உயிருக்குப் பாதுகாப்புள்ளவனை அது தேவைப்பட்ட சிலர் நாடி அமைதியடைவார்கள்.* அது போதுமான அளவில்லாவிட்டால் அடிக்கடி வாழ்வு பிறரால், பிற சந்தர்ப்பத்தால் எரிச்சல் மூட்டும். எரிச்சல் கோபத்தைக் கிளப்பும். *கோபம் உயிரின் பாதுகாப்பு.* தவம் செய்யப் பிரியப்பட்ட பாம்புக்குப் பிரம்மச்சாரி சொல்லிக்கொடுத்த உபாயத்தை பரமஹம்ஸர் கதையாகக் கூறுகிறார். தனிப்பட்டவருக்குக் கோபம் பாதுகாப்பு. குடும்பத்திற்கு அதுவே பொறுமை. பொறுமையும் பொறுப்பும் உள்ளவர் குடும்பம் காப்பாற்றப்படும். பென்னட்டிற்குப் பொறுப்பில்லாத பொழுது குடும்பம் சீரழிந்தது. அவர் பொறுப்பை ஏற்றபின் அதேபோல் தனக்கில்லாத 'பொறுப்பை' ஏற்று டார்சி அவர் குடும்பத்தைக் காப்பாற்றினான். உயிருக்கு அடுத்தது மனம் பெற்ற அறிவு. *அறிவு விஷயத்தைப் புரிந்து கொள்ளும்.* புரிவதால் பாதுகாப்புண்டு. புரியாதது பிரச்சனை. புரியாதது புரிந்தால் பிரச்சனையின் சிக்கல் அவிழ்ந்து வாய்ப்பாகும். அடுத்தது ஆன்மா. *ஆன்மா அனைவருக்கும் பாதுகாப்பு தரும்.* பெரிய ஆத்மாக்கள் ஜனிக்கும் நேரம் அவ்வூரில் சுபீட்சம் வளர்வதாகக் கூறுவார்கள். அளவு கடந்த பாதுகாப்பிருந்தால் அங்கு வாழ்வு வளரும். சுபீட்சம் வாழ்வு வளர்வது. சைத்திய புருஷன் ஆன்மா பரிணாம வளர்ச்சி பெறுவது. சத்திய ஜீவியத்திற்கும்

பாதுகாப்புண்டு. சுமுகம், பரஸ்பர உணர்ச்சி மூலம் ஐக்கியத்தை வளர்ப்பது சத்திய ஜீவியம். இங்கு அறிவும் செயலும் இணைந்திருப்பதால், பாதுகாப்பு தேவையில்லை. *அறிவுக்கு எதிராகச் செயல் செயல்பட்டால் பாதுகாப்பு தேவை.* சத்திய ஜீவியத்தைச் சத்தியத்தின் ஜீவியம் என பகவான் குறிப்பிட்டு ''இச்சொற்களை வேதத்திலிருக்கும் *சத்தியம், ரிதம், பிருஹத்* என்ற சொற்களிலிருந்து எழுதுகிறேன்'' என்கிறார். இவற்றை இருவகையாகக் கூறுகிறார்.

1) சத்தியம் - ஜீவியம், ஜீவியமுள்ள சத்தியம், 2) அடுத்தது **Supermind. Supermind** என்பது பல கருத்துகளை தன்னுள் கொள்ளும் **(elastic)** தன்மையுடையது. இந்த எந்தச் சொற்களும், சொற்றொடர்களும் பகவானுக்குத் திருப்தி தரவில்லை. இவற்றிலிருந்து எழும் சிறிய சக்திகளை அசரீரி, திருஷ்டி போன்றவற்றைக் குறிப்பிட்டு ''அவை மனிதனுக்குரிய உற்சாகம், அற்புத ஞானம், பாகுபாடு, சுட்டிக்காட்டுவதால் நாமறிய முடியும்'' என்கிறார். ''இவற்றிடையேயுள்ள இடைவெளி கடல் போல் **(gulf)** பிரிக்காமல் ஆகாயமாக விரிகிறது'' என்கிறார். சூரியசந்திரர் போல் எட்ட உள்ளது. இதைக் கடந்தது சச்சிதானந்தம். அதைக் கடந்தது ஆத்மா **(Spirit).** *சச்சிதானந்தத்தை* நினைவுகூர்பவன் பெறுவது ஆன்மிகப் பாதுகாப்பு. ஆத்மா **(Spirit)** உலகின் பாதுகாப்பிற்கு உறைவிடம். இவை பாதுகாப்பின் பல நிலைகளானால், வேலை நிரந்தரமாக இருக்கும் பாதுகாப்பு, விபத்து உடலைத் தொடாத பாதுகாப்பு, திருமண வாழ்வில் அமைதி குலையாத பாதுகாப்பு, ஊரில் பரவும் நோய் உடலைத் தொடாத பாதுகாப்பு, வாழ்வில் உள்ள தீராத வியாதிகள் வராத உடலுக்குரிய பாதுகாப்பு, கெட்ட பெயர் அண்டாமலிருக்கும் சமூகப் பாதுகாப்பு, கவலை மனத்தை ஆக்ரமிக்காத பாதுகாப்பு, *பணவரவு குறையாத பாதுகாப்பு, பணவரவு எனக்குக் குறையாது* என்ற நம்பிக்கையால் எழும் சாஸ்வதமான பாதுகாப்பு போன்றவை அன்பன் கருதுபவை. வேத ரிஷிகள் இயற்கை-யோடு ஒன்றி வாழ்ந்ததால் அவர் வாழ்வு காமதேனு, கற்பக விருட்சமாகியது. *எந்தப் பாதுகாப்பு தேவையோ அந்த*



*முழுமையுடன் பகுதியான நாம் இணைவது நிரந்தரப் பாதுகாப்புக்குரிய சூத்திரம்.*

பாதுகாப்பு உயர்ந்ததால் வாழ்க்கை உயர்ந்தால் *பாதுகாப்பு தேடி வரும்.* அன்பர்கட்கு வாய்ப்பும், பிரச்சனையும் வந்தால் உடலின் பெரும் பாதுகாப்பு வரும். *பாதுகாப்பு இல்லாமலில்லை, பாராட்டுவது குறைவு. தெரிந்து கொள்ள முடியாத நிலை பரவலாக இருக்கிறது.* உலகில் ஒரு மனிதனுக்கு வாய்ப்பு வந்தால் அவன் அதைப் பாதுகாக்க வேண்டும். அன்னையின் வாய்ப்பு பாதுகாப்பால் சூழப்பட்டு வரும். *வெறும் மனிதன் அன்னை அன்பனாக இருப்பது அவசியம்.* கேரளாவிலில்லாத பெண்கள் பாதுகாப்பு, பெங்களூரில் உள்ளது. வடநாட்டில் நடுத்தெருவில் தவறு நடக்கப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். டெல்லியில் அடிபட்ட டாக்டரை 6 மணி வரை எவரும் அண்டவில்லை. *பாதுகாப்புத் தருவது நாட்டின் பண்பு.* அதை அதிகபட்சம் பெற உதவுவது அன்பரின் பண்பு. அன்பருக்-குள்ளது அன்னை ஜீவியத்தின் பணிவு. படித்தவர்க்கு, மேல் ஜாதியினருக்கு மரியாதைக்குரியவர் என்பதால் பெண்கட்கு, அந்தஸ்துள்ளவர்க்கு, முகவசீகரம் உள்ளவர்க்கு, இனிமையான பழக்கம் உள்ளவர்க்கு, இயல்பாக உலகில் மற்றவர்க்குரிய பாதுகாப்பு ஓரிழை அதிகமாக உண்டு. நாம் கருத வேண்டிய தத்துவங்கள் எல்லாம் இவற்றுள் அடங்கியுள்ளன. ஒருவர் தன் சந்தர்ப்பத்தில் உள்ள பாதுகாப்பை எப்படி உயர்த்துவது, இல்லாததை எப்படிப் பெறுவது? *பொதுவான சட்டங்களை அனைவரும் அறிவார்கள். எவரும் நேரம் வந்தால் அதை அவசியமாக மீறுவார்கள்.* மீறாதது நெகட்டிவ் பாதுகாப்பு. பாஸிட்டிவ்வாக எப்படி அதையே செய்வது? வேலைக்குப் பாதுகாப்பு வேண்டுமானால் வேலைக்கு ஒழுங்காகச் சென்று திருப்தியாக முடிக்க வேண்டும். தம்பதிகட்கு திருமணப் பாதுகாப்புக்குக் கணவன் சம்பாதிக்க வேண்டும், பொறுப்பாக இருக்க வேண்டும், மனைவி மக்களைச் சுயநலமாக, அலட்சியம் செய்யக்கூடாது. கடமையைக் கண்ணும்கருத்து-மாக செய்தவரை காலம் கைவிட்டதில்லை. வேலையைத் திறமையுடன் பொறுப்பாக செய்த காவல்காரன் சம்பளம்

ஓராண்டில் மூன்று மடங்கு உயர்ந்தது. ஓரிரு சமயம் ஏழு மடங்கும் உயர்ந்தது. பெரும் குறுக்கீட்டால் அவனை அவசரமாக நீக்கிய முதலாளி மீண்டும் அவனைத் தேடிப்போய் வேலையை ஏற்றுக்கொள்ளச் சொன்னார். இலட்சியவாதிக்கும், இளமையால் துள்ளுபவருக்கும் கடமை, பொறுப்பு சரியாக இருந்தால் முழுப் பாதுகாப்புண்டு. *ஆரம்பகால அவசரம் செயல்பட்டு வேலை போனாலும் மீண்டும் அழைப்பு 'செய்த வேலை'யிடமிருந்து வரும்.* பெண்ணைப் பார்த்த பிள்ளை வீட்டார் நாத்தனாரும் அண்ணியும் 'இந்தப் பெண் என் வீட்டில் வந்து குடித்தனம் செய்ய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' எனப் போட்டி போட்டனர். முடிவில் திருமணமான பின் மாமியார் தன் ஐந்து பிள்ளைகளுடன் மாறி மாறி இருந்தவர் இந்தப் பெண்ணிடம் நிலையாக வந்து தங்கினார். அன்னையை அறிந்தபின் அன்பருக்கு இது போன்ற ''பாதுகாப்பு'' எல்லாத் துறைகளிலும் கிடைக்கும். செய்யும் வேலையைச் சரியாகச் செய்தால் பாதுகாப்பு உண்டு. *சமர்ப்பணமாகச் செய்தால், அன்னையின் பாதுகாப்புண்டு.* 250 மைலுக்கு அப்பால் திருடனைத் தேடிப் போய் ஏமாந்தவன் பணம் திரும்ப வந்த அதிசயம் அன்னை நிகழ்த்தியது. கணக்குப் பரீட்சை சிம்ம-சொப்பனமான சிறுமி எல்லா இதர பாடங்களிலும் முதல் மார்க்கு வாங்கினாள். *முடிந்ததை முறையாக அடுத்த பரீட்சையில் செய்தவள் சமர்ப்பணமாகச் செய்தாள்.* முதல் மார்க் பெற்றதை அவளால் நம்ப முடியவில்லை.

ஊரில் ஒன்பது கட்சி, போட்டி, பொறாமை. ஒரு கட்சிக்கு வெளி ஆதரவு. வெளி மனிதருக்கும் உள் விவகாரத்திற்கும் தொடர்பேயில்லை. வெளி மனிதனுக்கு உள்ளேயுள்ள போட்டி பொறாமை தெரியாது. வெளியூர் மனிதன் அன்பன். அவர் செய்த அன்னை சேவையால் ஒரு கட்சி பிரபலமாயிற்று. அதுவும் வெளியூராருக்குத் தெரியாது. பொறாமையாலும், போட்டியாலும், பிரபலமானவரைத் தாக்க முடிவு செய்தனர். அப்பெரும் தாக்குதலின் சிறுபலன் வெளியூராருக்குக் கிடைத்தால் அவர் காற்றில் பறக்க வேண்டும். போட்டி போட்ட கட்சி வரிசைகள் அமைந்தவிதம், மாறிய நிலை, மாறிமாறி



அமைத்த முறை தாக்கும் படைக்குள்ள ஆதரவை அறவே நீக்கியது. *அன்னையுடன் தொடர்பு உண்டானால் அதன் பெயர் பாதுகாப்பு.* எப்படியெல்லாம் அது உருவாகும் எனப் பார்த்த பின்னரே தெரியும். ஆனால் ஒன்று, அது வரும்பொழுது தேவைப்பட்ட பாதுகாப்பு போல் பத்து மடங்கு வரும். ஒரு போலீஸ்காரன் துணை வேண்டுமானால் சூப்பரின்டென்டென்ட் துணை நிரந்தரமாக இருக்கும். *நம் பங்கைச் செய்து முடித்தால் பாதுகாப்புக்குக் குறைவிருக்காது.*

பொதுவாக பெருங்கடன் பெற்றவர்கள் பெரும் சாதுரிய-மானவர்களாக இருப்பார்கள். இவர்கட்குரிய பாதுகாப்பை இருவகையாகச் சொல்லலாம். முதல் வழி வாழ்வுக்குரிய அறிவின் வழி. *கடன் வாங்கப் பயன்படுத்தும் சாதுரியத்தை வாழ்க்கையில் வெளிப்படுத்தப் பயன்படுத்தினால் இவர்கட்கு கடன் எழாது.* வாழ்க்கை வசதியாக இருக்கும். இவர்கள் அன்னையிடம் வந்தால் கடன் எளிதாக, அதிகமாகக் கிடைக்கும். அன்னையின் பாதுகாப்பு அவர்கட்குக் கடன் தொல்லையின் சிரமத்தைத் தாங்க உதவும். அன்பர் *தன்னையறிந்து, தன்னை அதிகபட்சம் முன்னேற்ற முடிவு செய்து, கடனை ரசிக்கும் குணத்தைச் சமர்ப்பணம் செய்தால், இவர் எவ்வளவு கடன் பெற முடியுமோ அவ்வளவு சொத்து சேரும்.* மனநிலை மாறுவது **sincerity**. கணவன் மனைவி பிரிவது அடிப்படைக் குறைகளால்; சம்பாதிக்காத கணவன், எந்தப் பொறுப்பும் அற்ற சோம்பேறி மனைவி போன்றவை அவை. பெண்ணுக்குச் சுதந்திரமில்லாத பழைய காலத்தில் அவள் அடங்கியிருந்தாள். படித்து சம்பாதிக்கும் பெண்ணுக்கு அந்த அடக்கமிருக்காது. *பயந்து அடங்குவதற்குப் பதிலாக பொறுப்புடன் அடக்கமானால் அவளுக்குப் பிரச்சனையிருக்காது.* அன்பர்கள் இந்த அவல நிலையிலும் பிரியமுடியாத 'பாதுகாப்பு'ப் பெறுவர். முறையானவர்க்கு முடிவான பாதுகாப்பு அன்னையிடம் உண்டு. பத்துப் பேர் நண்பர் குழாமிருந்தால் ஒருவருக்கு அடிக்கடி இடறி விழுவதும், பிறர் மேலே இடிப்பதும், காயம் படுவதும் வழக்கமாக இருக்கும். மற்ற எட்டு பேருக்கு இவை அரிபொருளாக இருக்கும். *ஒருவருக்கு வாழ்வில் இடறி*

*விழுந்ததோ, காயம்பட்ட நிலையோ இருக்காது.* அவர் உடல் உஷாரானது. அன்பரானால் கடைசி நிலையில் அவதிப்படுபவருக்கு அடியே படாதவருடைய நிலையை அன்னை சூழல் தரும். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் உஷாராவது உசிதம். தாழ்த்தப்பட்டவர், ஒதுக்கப்பட்டவர் அந்த நாளில் எல்லாச் சிறுமைகட்கும் கொடுமைகட்கும் ஆளாயினர். உயர்ந்தவர்க்குச் சமூகம் எல்லா மரியாதையும் தந்தது. *அந்த நாளில் உயர்ந்தோர் பெற்றதை இந்த நாளில் தாழ்ந்தோர் பெறுகின்றனர்.* அன்பர்கட்கு எந்த நாளிலும் உயர்ந்தோர் பெறும் மரியாதையுண்டு. காலத்தால் சமூகம் மாறுகிறது, அன்னை ஜீவியத்தால் அன்பர் உயருகிறார். *எந்தப் பாதுகாப்பையும் எவரும் கேட்டால் உடனே அது கிடைக்கும்.* செல்வாக்குள்ள பிரபல அரசியல் எதிரி வன்மத்தால் பொய்க் கேஸ் போட்டு அரெஸ்ட் செய்ய முயலும்பொழுது அன்பர் பாக்டரியில் எதிரிக்கு சாதகமான சூழல் எழுந்தது. ஒரு தொழிலாளி இறந்தான். பிரமுகர் அரெஸ்ட் வாரண்ட் போட்டார். ஆனால் அன்பர் அரெஸ்டாகவில்லை. பிரமுகர் செல்வாக்கை இழந்து பதவியை இழந்தார். அன்பர்கள் மனம் சுத்தமானால் பாதுகாப்பு கேட்காமலேயே வரும். **B.P., sugar** உள்ளவர் முதிர்ந்த வயதில் டாக்டர் கொடுக்கும் மருந்தைச் சாப்பிடாமல், அவர் சொன்னதைப் பின்பற்றாமல், அவர் கூடாது என்பதைப் பிடிவாதமாக செய்தார். வயிற்றுப் போக்கு வந்தது, மயக்கமானார். ஆபத்து விலக்க முடியாதென வந்தது. ஆஸ்பத்திரியாலும் முடியாது போல் சில நாட்களிருந்தன. நிலைமை மாறி நெடுநாள் வைத்தியம் பெரும் செலவில் செய்து பிழைத்தார். *பிழைத்தபின் டாக்டர் ''எல்லாம் போய் ஓரிழை உயிருடனிருந்ததால் பிழைத்தார்'' என்றார்.* தன் உடம்பைத் தானே கவனித்துக் கொள்ளும் அன்பருக்கு டாக்டரிடம் போகும் வாய்ப்பு எழாது. ''வியாதி எனில் குணம்'' என்பது மந்திரம். 'வாய்' உள்ளவர்க்கு வியாதி வரும், ஆபத்து வரும். அன்னை கடைசி வரை காப்பாற்றுவது உண்மையென்றாலும் எந்த நேரம் நிலைமை மீறிப்போகும் எனக் கூறமுடியாது. *பொய் சொல்லாதவர்க்கு வியாதியில்லை.* வியாதியென நெடுநாளாக இருந்து அனுபவிப்பவர், இந்த வியாதி எப்பொழுது வந்தது,



*எந்தப் பொய் சொன்னதால் வந்தது* என சில சமயம் அறிய முடியும். அப்பொய் சமர்ப்பணமானால் வியாதி தீரும். ஆன்மிகத் தத்துவப்படி வியாதி என்பது கர்மவினை, பாவத்தால் எழுந்தது. விசாரணையை மேலும் தொடர்ந்தால் எந்த வியாதிக்கும் மூலமாக ஒரு பொய்யிருக்கும். 'பொய் வியாதி' என்பதை ஏற்பது சிரமம். ஏற்றாலும் ஏற்காவிட்டாலும், தன்னைப் பொறுத்தவரை வியாதியைக் குணப்படுத்த முடிவுள்ளவர், இம்முறையைப் பயன்படுத்தினால் பலன் நிச்சயம்.

தாயும், குடும்பமும், வீடும், ஊரும், தானே கற்கும் பழக்கங்களும், *முக்கியமாகப் பண்புகளும் சிறு வயதிலும், வீட்டிலும், ஊரில் பழகவும் வாழ்வை நடத்தவும் பாதுகாப்பைத் தரும்.* **February** 19 பிறந்த தினம் உள்ளவர் பாண்டி வர ஒரு நாள் பிரயாணம் செய்ய வேண்டும் என்பதால் வர போக இருக்க மூன்று நாள் லீவு வேண்டும். அதனால் அவர் **February** 21 அன்று வருவார். ஒரு வருஷம் அவர் வாழ்வில் பேரதிர்ச்சி ஏற்பட்டு மறைந்தது. எனவே *பிறந்த நாள் அன்று அன்னையை தரிசித்தால் அது வந்திருக்காது என்ற கருத்தைக் கருதும் பொழுது* **February** 19, **February** 21 இரண்டு நாள் ஆசிரமத்தில் தங்க ஐந்து நாள் லீவு வேண்டும். இது அறிவுக்குப் புலப்படாத பொழுது, சமர்ப்பணத்தை நாடினார். அடுத்த ஆண்டு அந்நாட்களில் எலக்க்ஷனுக்காக ஒரு வாரம் லீவு விட்டு, இவருக்கு எலக்க்ஷன் வேலை தரவில்லை, அந்த ஆண்டு இரண்டு நாளும் வந்தார். அதன் பிறகு அவர் வாழ்வில் அந்த அதிர்ச்சியில்லை. ஓராண்டு எலக்க்ஷனால் வர முடிந்தது. அது 1970-க்கு முன். அடுத்த 20 ஆண்டுகள் அதே போல் வர முதல் சமர்ப்பணம் உதவியதை அவர் அறியவில்லை. எவருக்கும் புரியவில்லை. *வாழ்வின் தேவைகள் பல. ஒவ்வொரு தேவையை அனுபவிக்க ஒவ்வொரு பழக்கம், திறமை பெறுகிறோம்.* பெற்றதைக் காப்பாற்ற ஒரு வழி செய்கிறோம். ஆயிரம் தேவைகளை ஆயிரம் வகையாகப் பெற்று ஆயிரம் வகையாகப் பாதுகாப்பது மனித வாழ்வு. சமர்ப்பணம் இன்றில்லாத ஆயிரம் வசதிகளை உற்பத்தி செய்து அவையனைத்தையும் நாமறியாமல் பாதுகாக்கிறது என்பதை நாம் கண்ணுற்றபின்னும் *நாம் எப்படிச் சமர்ப்பணம் செயல்படுகிறது என அறிவதில்லை.*

0.75 பைசாவுடன் கிராமத்திலிருந்து டவுனுக்கு இடம் கிடைக்காத 'படிப்பைப்' படிக்க வந்தான் ஓர் அற்புதப் பிறவி. அரை மணி மட்டும் அறிமுகமானவர் இடம் பெற்றுக் கொடுத்தார். எங்குத் தங்குவது, எப்படிச் சாப்பிடுவது என யோசிக்க அவகாசமில்லை. இடம் கிடைத்தது போல அவையும் அடுத்த ஆறு மாதம் கிடைத்தன. பிறகு ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அடுத்து ஒன்றரை வருஷப்படிப்பு முடிந்தது. *தற்செயலாய் வழியில் கண்டவர்* நல்லெண்ணம் முதலில் ஆறு மாதமும், அதன் பிறகு பதினெட்டு மாதமும் உதவி பெற்றுத் தருகிறது என்றால், இந்த இளைஞனின் முழுச் சரித்திரமும் *அந்த நல்ல எண்ணத்திறன்* என விளங்குமா? அன்னையின் நல்லெண்ணம் அவர் கருணையில் ஓரிழை. அவர் கருணை அருளின் பகுதி. *அதைக் கடந்து பேரருள் உண்டு.* மனிதன் எதையும் நினைப்பவனில்லை, நடந்தால் ஏற்பது, நடக்காவிட்டால் அது நினைவுக்கு வராது. அன்னை அதை **unconscious** என்கிறார். பாதுகாப்பு என்ற கருத்தை எந்த அளவில் நாம் புரிந்து கொண்டாலும், அது அடுத்த அளவில் முழுமையாகச் செயல்படும் என்பது சரி. மனிதன் நல்லவன், தெய்வம், குடும்பம் ஒரு கோயில், ஊர் உத்தமமான இடம், சமூகம் சக்தியின் சாகரம். அவனுடைய தேவைகள் துளி. சுற்றியிருப்பது கடல் போன்ற வசதி. வாழ்வு பிரச்சனையில்லை. உள்ளதை உள்ளபடி உணர்ந்து பெற்றால் எதற்கும் பஞ்சமில்லை. ஐந்து வயது சிறுவனுக்கு ஆட்டம் போட இருப்பதெல்லாம் இடம் என்பது போல் வாழ்வு வளமானது. *அவன் அன்பனானால், தேவையை மறந்து விடலாம், பாதுகாப்பை நினைக்க வேண்டாம்,* கற்பனைக்குரியதைக் கேட்கலாம், பெறலாம், பெற்றதை நீட்டிக்கலாம். நான் கூறும் இக்கருத்து உலகமறியாத உன்மத்தவாதியின் எண்ணம் என நினைக்கவும் தோன்றும். 1800-இல் அமெரிக்காவில் உள்ளதை விவரிக்கும் ஆசிரியர் கூறியது இது. ஒரு பெரிய கப்பல் செய்ய 4800 **oak** மரம் தேவைப்பட்டது 1800-இல். அன்று இங்கிலாந்தில் மட்டும் 7000-க்கும் மேற்பட்ட கப்பல்களிருந்தன. நாட்டின் வளம் இவ்வளவு மரங்களையும் தந்தது. ஏன்? **Web, Internet** பயன்படுத்துபவர்கட்கு ஒரு நாளில் எத்தனை கோடி **email**-கள் செல்கின்றன, எத்தனை கோடி பக்கங்கள் அச்சடிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன, அவை எங்கு எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன எனத் தெரியும். **Web**-இல் இடம் முடிவற்றது. உலகில் வளமும், பாதுகாப்பும் வரையறையின்றி வழங்கப்படுவதை, நம் கடமை பெற்று அனுபவிப்பதேயாகும். கவி அதை 'புண்ணியவாளர் புகழினைப் போல்' என வர்ணிக்கிறார். பாதுகாப்புப் பெறுவது சரி, நல்லது. அதன்படி அன்னையின் பாதுகாப்பை அறிவதை நாம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். அதையும் கடந்து அன்னையை நாட முயல வேண்டும். ஆடு மாடுகள் காட்டிலுள்ள விஷப்பூண்டுகளைச் சாப்பிடுவதில்லை, விஷம் எது என அறிந்து விலக்கும் ஞானமுடையவை விலங்குகள். மனிதனுக்கு வாழ்வில் அந்த ஞானம் பல வழிகளிலும் வருவதைக் கண்டோம். *ஆத்மா விழித்தால் அன்னையை அறிய முடியும். அவருடைய பாதுகாப்புக்குள் நுழைந்து நிரந்தரமாக இருக்க முடியும். உலகில் உள்ள அத்தனை வகையான பாதுகாப்பையும் அன்னையின் கோணத்தில் விவரிப்பது உயர்ந்த முயற்சி.* தேவன் கதை 'வேதாந்தம்'. வெகுளியான இளைஞன் வீராப்பாகச் சொத்தை இழந்து வேலை தேடி சென்னைக்குப் போய் பர்ஸையும் இழந்து நிர்க்கதியானபின் அவனுக்கு வந்த உதவிகள், பிரச்சனைகள், அவை தீர்ந்த விதம், தேவன் வாழ்வின் உள்ளொளியை விளக்குவதாகும்.

(தொடரும்)

## ஜீவிய மணி

*எந்த விஷயத்திற்குச் சந்தோஷப்பட வேண்டுமோ, அதற்கு நாம் அழுது வருத்தப்படுகிறோம் என்பது ஆத்ம ஞானம். இதை மனம் ஏற்றவுடன் துக்கம் குறையும். ஞானம் முதிர்ந்தால், துக்கம் சந்தோஷமாகும்.*

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## ௮. உள்ளத் திருக்கோயில்

அன்னையை வழிபட பல முறைகளை விவரித்து 'அன்பர் வழிபாடு' என்ற ஒரு கட்டுரையை வெளியிட்டோம். அந்த முறைகள் எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு சிறப்புண்டு. இக்கட்டுரையில் அந்தச் சிறப்பைக் குறிக்கப் பிரியப்படுகிறேன்.

முறை எதுவானாலும் அதன் பலன் தெரிய வேண்டுமானால் அம்முறை பூரணம் பெற வேண்டும் (It should be saturated with Mother's Force). முறைக்குரிய பலன் எப்பொழுதும் உண்டு. பூரணப் பலன் பெற முறை பூரணம் பெற வேண்டும். ஒரு முறையை நாம் கடைப்பிடிக்கும்பொழுது அது பூரணம் பெற்றுவிட்டதா, நாம் அதை முழுமையாக ஏற்றுக்கொண்டோமா என்பதற்கு ஓர் அறிகுறி எது என்பதைச் சொல்ல விரும்பியபொழுது அன்னை தாமே பின்பற்றிய வேறொரு முறை நினைவுக்கு வருகிறது. அதையும் இங்கு விளக்கப் பிரியப்படுகிறேன். அந்த முறையைக் குறிக்கவே 'உள்ளத் திருக்கோயில்' எனத் தலைப்பிட்டேன்.

பூசல் நாயனார் மானசீகமாக மனதில் கட்டிய சிவன் கோவிலைச் சிவபெருமான் அரசன் கட்டிய கோவிலைவிட உயர்ந்ததாகக் கருதி, அவனுடைய கும்பாபிஷேகத்தை ஒத்திப்போடச் சொன்னார். மனம் எழுப்பிய கோவில் மானசீகமானது. அது பெருமானின் மனத்தைக் கொள்ளை கொள்ளக்கூடியது. மதிலால் சூழப்பட்ட கோவிலைவிட சக்தி வாய்ந்தது. இந்த நிகழ்ச்சியில் உள்ள கருத்து இரண்டு. ஒன்று, மனோசக்திக்குப் புறவாழ்வு கட்டுப்படும். புறவாழ்வைப் புறக்கணித்து புனிதன் மனத்தை நாடுவான். மற்றொன்று, (symbolism) பக்தி சேவைக்கு அறிகுறியானது (symbol). அந்தக் குறிப்பால் அது குறிக்கும் வாழ்வு மனிதனுக்குக் கட்டுப்படும்.



புற வாழ்க்கையான சேவை அக வாழ்க்கையான பக்தியால் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. எனவே மனத்தின் பக்திக்கு ஓர் இடம் ஏற்படுத்தினால், புற வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் கருவூலமாக அது அமையும். அதையே உள்ளத் திருக்கோயில் என்றேன். அன்பர் வீட்டில் அப்படிப்பட்ட திருக்கோயிலை அமைப்பது எப்படி என்பதைக் குறிப்பதே இக்கட்டுரை. இதுவே ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் ஏற்பட்டதன் அடிப்படை. உலகத்தின் குறிப்பாக (symbol) ஓர் இடமாக ஆசிரமத்தை அன்னை ஏற்படுத்தினார். எனவே, ஆசிரமத்தில் நல்லது நடந்தால் அது உலகத்திற்கு நல்லது. உலக வாழ்வை ஆசிரமம் குறிப்பால் உணர்த்துவதால் உலக வாழ்க்கையை நிர்ணயிக்கும் திறன் ஆசிரம நிகழ்ச்சிகளுக்குண்டு என்பது அன்னையின் விளக்கம். உலகத்தின் போக்கை நிர்ணயிக்க அன்னை ஓர் ஆசிரமம் ஏற்படுத்தியதுபோல் நம் குடும்ப வாழ்க்கை அன்னையின் பேரொளியால் அனவரதமும் சூழப்பட்டிருக்க நாம் ஒன்று செய்ய முடியுமா என்பதே கேள்வி.

அன்பர் வழிபாட்டில் உள்ள 30 முறைகளில் ஏதாவது ஒன்றை முழுமையாகப் பின்பற்றினால் நல்லது என்று சொன்னேன். எல்லா முறைகளையும் பின்பற்றுபவர் சிறந்தவர்; யோகச் சிறப்புடையவர். அவரைப் பற்றி நாம் கருதாமல் எல்லா முறைகளின் சிறப்பும் பலன் தருமாறு (symbolic) ஒரு முறையைப் பின்பற்ற வழியுண்டா? எனில் அப்படியும் ஓர் உபாயம் உண்டு என்று கூறி, அதை விளக்கும்முன் ஒவ்வொரு முறையும் முழுமை பெற்றதற்குரிய அறிகுறிகளைச் சொல்கிறேன்.

தியானம் முழுமைப்பட்டு, அதில் அன்னை பூரணம் பெற்றதற்கு அறிகுறி தானே தியானம் நம்மைத் தேடி வந்து ஆட்கொள்வது. தானே அமையும் தியானம் சிறந்தது. நம்முடைய முறை முழுமையானது என்பதற்கறிகுறி.

நாம ஜெபம் முழுமைப்பட்ட நிலையில், அதன் பலன் சித்திக்கும் நிலையில், மனம் மௌனமாகும். வாயால் எழுப்பும் ஒலி மனத்தால் மௌனத்தில் எழும். ஜெபம் என்பது ஒலித்துச் சொல்வதே என்றாலும், அதற்குரிய முறை சரியானதாக

இருந்து, முழுமைபெற்ற காலத்து, சொல் ஒலியை இழக்கும். மேலும் முறையை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டி, சொல்லைப் பலவந்தமாக எழுப்பினால், அந்தச் சொல்லுக்கு மந்திரசக்தி உண்டு; சூழல் அதிரும்.

அழைப்பு உச்சக்கட்டத்தை அடையும்பொழுது நாடி, நரம்புகளில் அமிர்த ஓட்டம் எழும்.

பொதுவான ஆத்ம சமர்ப்பணம் நிறைவடைந்தபின் சமர்ப்பணம் உயிர் பெற்று அதுவே நம்மை நினைவுபடுத்தும். நாம் சமர்ப்பணம் செய்வதற்கு முன்னால் நாம் செய்ய வேண்டியதை அதுவே தானே செய்ய முன்வரும். அந்நிலை நம் முறை சரியானது என்பதைக் குறிக்கும்.

குறிப்பிட்ட செயலைச் சமர்ப்பணம் செய்து நாம் செய்தது சரிதானா என்று பார்த்தால், முதலாவதாக அந்தப் பிரச்சனை முழுவதும் தீர்ந்திருக்கும். நாம் எடுத்துக்கொண்ட செயலில் 18 பாகங்கள் இருந்தால், ஏதாவது ஒரு பகுதியிலாவது அன்னையின் அதிர்ஷ்டச் சுவடு தெரியும். நாம் எடுத்துக்கொண்ட செயல் வீடு கட்டுவது என்று கொண்டால், சிமெண்ட் வாங்குவது அதில் ஒரு பகுதி. சிமெண்ட் வாங்கப் போன இடத்தில், நமக்கும் சிமெண்ட் ஏஜென்சி வேண்டுமா எனக் கேட்டால் அது அன்னையின் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

முக்கிய பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்தால், அது பூர்த்தி ஆகும் நிலையில், அதே நிலையில் உள்ள பல பிரச்சனைகளில் ஒன்றாவது தானே தீரும் அறிகுறியைக் காட்டுவது, நம் சமர்ப்பணம் பூரணமானது என்று குறிக்கும்.

தொந்தரவான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்ய நினைவு வந்தாலே நம் பக்தி சிறப்புடையது என்று பொருள். சமர்ப்பணத்தால் அந்தப் பிரச்சனை தீர்ந்தால் அதைவிடப் பெரிய அறிகுறி கிடையாது.

ஒரு வகையில் வாய்ப்பும், தொந்தரவான பிரச்சனைக்கு ஒப்பானது. பெரிய வாய்ப்பு வந்தால், அத்துடன் சமர்ப்பண நினைவும் வந்தால் நாம் முறையைச் சரியான அளவில் பூரணமாகக் கடைப்பிடிக்கிறோம் என்று அர்த்தம். சரியான



முறையில் இந்தச் சமர்ப்பணம் பூரணமான நிலையில் புதிய வாய்ப்புகள் எழும். அவை தொடர்ந்து வந்தபடியிருக்கும். அதேபோல் தொந்தரவான பிரச்சனை தீர்ந்தால் போதும், அதுவே நம் பூரணத்தைக் காட்டும் என்றாலும், அடுத்த நிலையில் அது பெரிய வாய்ப்பாக மாறும். என் எதிரிக்குக்கூட இந்தத் தொந்தரவு வரக்கூடாது என்பது போன்ற சிரமம் வந்து, நம் சமர்ப்பணம் பூரணம் பெற்ற நிலையில், இந்த மாதிரி வாய்ப்பு இதுவரை எவருக்கும் கிடைத்ததில்லை என்ற நிலை ஏற்படும்.

காணிக்கை செலுத்துவதால் நாம் கேட்ட பலனைப் பெறுதல் அதன் முழுமையைக் குறிக்கும். நாம் செலுத்தும் காணிக்கை நம்மைப் போன்ற மற்றவருக்கு அவரை அறியாமல் பலன் அளிப்பதுண்டு. அது நம் காணிக்கையின் தூய்மை நிறைவுபெற்றதைக் காட்டும். ஒரு பிரச்சனை தீர காணிக்கை செலுத்தி, அதனால் வேறொரு பிரச்சனை தீர்வதும் உண்டு. அதுவும் அப்படிப்பட்ட அறிகுறி. பிரச்சனை தீர செலுத்திய காணிக்கை பிரச்சனையைத் தீர்த்து, வாய்ப்பை அதன் மூலம் உற்பத்தி செய்தால் அதற்கும் அப்படிப்பட்ட முக்கியத்துவம் உண்டு. காணிக்கை அனுப்பியவுடன் விரைவாகப் பிரஸாதம் வருவதும் ஒரு சின்னம். நாம் கொடுத்த காணிக்கையைத் தொடர்ந்து நம் போன்றவர் பலர் காணிக்கை செலுத்துவதும் அறிகுறி ஆகும்.

நினைவு பூரணம் பெற்றால் அது மனதில் உருவமாகத் தென்படுவதுண்டு. அப்படித் தென்பட்டால் அது சிறந்த அறிகுறி. நினைவே வழிபாடாக எடுத்துக்கொண்டபின் ஒரு பிரச்சனை ஏற்படும்பொழுது அந்த நினைவால் பிரச்சனை தீர்வதும் நினைவு பூரணம் பெற்றதற்கறிகுறி.

சுத்தம் சிறப்பாக இருப்பதை எவரும் தெரிந்துகொள்ள முடியும். எனினும் அதற்கும் ஓர் அறிகுறியைச் சொல்லலாம். புறச் சுத்தம் உயர்ந்தது. அகச் சுத்தம் இருந்து, அதன் வெளிப்பாடான புறச் சுத்தம் சிறந்தது. சுத்தம் என்பதை அதற்குரிய முறையோடு நிறைவேற்றினால் அதற்குரிய

அறிகுறிகள் பல. ஒன்றைக் குறிப்பிடுகிறேன். அன்றாட அத்தியாவசியமான செலவுகளுக்குப் பணத் தட்டுப்பாடு இல்லை என்றால், சுத்தம் பூர்த்தியாகிவிட்டது என்று பொருள்.

இதற்கு விதிவிலக்கே இல்லை. சுத்தம் இருந்தால் பணத் தட்டுப்பாடு இருக்காது என்பது பூரண உண்மை. அது அன்னையின் உண்மை என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லலாம். ஒரே ஒரு விதிவிலக்கு என் சொந்த அனுபவத்தில் இதுவரை நான் பார்த்திருக்கின்றேன். அநேகமாக இதை யாரும் பார்த்திருக்க முடியாது. அது ஆயிரத்தில் ஒன்று என்று சொல்ல முடியாது. பதினாயிரத்தில் ஒன்றாக இருக்கலாம். அளவுகடந்த சுத்தமும், அளவுகடந்த வறுமையும் கலந்து ஒரே இடத்தில் காணப்படுவதாகும். இதற்குரிய காரணம் மிகவும் அடிப்படை-யானது. இங்கு நமக்குத் தேவையில்லை என்பதால் அதைச் சுட்டிக்காட்டுவதுடன் விட்டுவிடுகிறேன். மனம் அளவுகடந்த அழுக்கால் நிரப்பப்பட்டிருந்தால், நான் சொல்லும் பலனைச் சுத்தம் அப்படிப்பட்டவர்களுக்குக் கொண்டுவந்து தராது.

ஒழுங்கு, சுத்தத்தைவிட உயர்ந்தது. அது பூரணமானதால் நமக்கு வேண்டிய பெருஞ்செலவுகளுக்குப் பணம் தடை-யின்றிக் கிடைக்கும். சுத்தம் செல்வத்தைக் கொடுக்கும். அதிகமான அளவிலும் கொடுக்கும் என்பது உண்மை. வீடு கட்ட, கல்யாணம் செய்ய, கம்பெனியில் முதலீடு செய்ய, நகை செய்யத் தேவையான பணம் அன்றாடச் செலவுகளைவிட அதிகமான தொகையாகும். ஒழுங்கைக் கடைப்பிடித்துவரும் வீட்டில் இப்படிப்பட்ட பெரிய செலவு ஒன்று வரும்பொழுது அதற்குரிய பணம் தானே புறப்பட்டு வந்து முன்னிற்கும்.

தணிவான பேச்சு பூரணமாகப் பலித்தால் எவரும் நம் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கமாட்டார்கள். அதுவே அது பூர்த்தியானதற்கு அறிகுறி.

சண்டைகளைத் தவிர்க்க முனைந்து வெற்றி பெற்று, வெற்றி பெருவெற்றியானால், நாம் சம்பந்தப்பட்ட இடங்களில் ஒருவரும் சண்டையை ஆரம்பிக்கமாட்டார்கள்.



குறை கூறுவதில்லை என்ற முடிவு அன்னை அருளால் பூர்த்தியான ஒருவர் வாழ்வில் அதற்கு அறிகுறியாகக் காண்பது சிறப்பு. ஒருவனுக்கு உள்ள குறையை நாம் கூற மறுக்கும்-பொழுது அந்தக் குறையை விலக்கி அவன் நம் விஷயத்தில் செயல்பட்டு உலகத்தையே அதிரவைப்பான். ஒரு கருமி பிரசித்தி பெற்றவராயினும், அவரது கருமித்தனத்தைச் சொல்லாலும், எண்ணத்தாலும் நாம் உணராவிட்டால், நாம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தில் அவர் உதார குணத்துடன் நடந்துகொள்வார்.

அன்னையின் கருத்தைப் புரிந்துகொள்ள முயன்றால் நம் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் எள்ளளவும் குழப்பமோ, சந்தேகமோ வாராது.

மற்றவர் நோக்கில் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள முயன்றால், நமக்கும் மற்றவர்க்கும் உள்ள ஒரு பிரச்சனை தீரும் பொழுது, அது இருவருக்கும் இலாபமாக இருப்பதே இந்த முறை பூரணம் பெற்றதற்கு அறிகுறி.

நம் வீட்டில் அன்னையைப் பிரதிஷ்டை செய்ய முயன்றால் அது பல நிலைகளில் பலிக்கும். புதியதாக வருபவர்கள் தியான மையம் போலிருக்கிறது என்பார்கள். அதுவே சிறப்பு. சிறப்பு பூரணம் பெறுவதற்குரிய அறிகுறி ஒன்றுண்டு. **(There will be no lapses, slips or mishaps even in material objects).** வீட்டினுள் அன்னை மனிதனையும், அவன் செயல்களையும், அங்குள்ள பொருள்களையும் தாங்கிப் பிடித்துக்கொண்டு எந்தத் தவறும், குறையும் ஏற்படாமல் பாதுகாப்பது தெரியும். ஒருவர் அசம்பாவிதமாகப் பேச வாயெடுத்தால், தெருக்கதவைத் தட்டி உள்ளே வரும் விருந்தாளி அசம்பாவிதமான பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பார். கையிலிருந்து தவறி விழுந்த கைக்-கடிகாரம் வேஷ்டியில் சிக்கிக் கீழே விழுவது தடுக்கப்படும். ஸ்டாம்ப் ஒட்டாமல் போஸ்டாபீசுக்கு நாம் தபாலைக் கொடுத்தனுப்பினால், எடுத்துக்கொண்டு போனவர் ஸ்டாம்பை ஒட்டி போஸ்ட் செய்வார். அன்னை இருப்பதற்கு இவை அடையாளம்.

குடும்பத்தினர் மனத்தில் அன்னை பூரணமாகப் பிரதிஷ்டை ஆனதற்கு வெகுநீண்ட விளக்கம் கொடுக்கலாம். ஒரு தவறான குணமாவது மாறி, அதற்கெதிரான நல்ல குணம் ஒருவரிடம் வெளிப்பட்டால், இம்முறை பூரணம் பெற்றதற்கு அது முடிவான அறிகுறி.

பகவான் தாம் எழுதியவற்றை எவரும் புரிந்துகொள்ள-வில்லை என்றார். 'அன்பர்கள் வழிபாட்டில்' அவர் நூல்களைப் பயிலுவதை ஒரு வழிபாட்டு முறையாக எழுதியிருக்கிறேன். அவை புரிந்தாலும், புரியாவிட்டாலும் வழிபாட்டுக்குரிய முழுப் பலன் உண்டு. அதை மட்டும் கருதியே அதை எழுதினேன். முரணான கருத்துகளைப் பல இடங்களில் பகவான் தெரிவித்திருக்கிறார். அதை நாம் அப்படியே ஏற்றுக்-கொள்கிறோம்; புரிந்துகொள்ள முடிவதில்லை. முறை சரியானது ஒன்றானால் அந்தக் கருத்து புரியும்.

பகவான் நூல்களைப் பயின்றால் தியானம் வரும். அன்னை நூல்களைப் படித்தால் இனிமையான உணர்ச்சி ஏற்படும். இது பூரண சிறப்புள்ளது என்பதற்கு ஓர் அடையாளம். யாரைக் கண்டால் அளவுகடந்த எரிச்சல் ஏற்படுகிறதோ அவரும் எரிச்சலை நம் உள்ளே கிளப்பவில்லை என்றால் இம்முறை பூரணம் பெற்றது என்றாகும்.

மந்திர ஜெபம் நம் பிரச்சனைகளைத் தீர்க்க உதவும். மிகவும் சிறப்பாகப் பூர்த்தியானால், எந்தப் பிரச்சனையையும் தீர்க்க உதவும். நம்முடைய மந்திர ஜெபம் நம் காதில்பட்ட வேறொரு பிரச்சனையைத் தீர்க்கும்பொழுது நாம் இம்முறையைப் பூரணமாகக் கடைப்பிடித்துள்ளோம் என்று அறியலாம்.

உள்ளுணர்வால் புற நிகழ்ச்சிகளை அறியும் முறை, நம் வாழ்வில் **(In our environment)** நம் உணர்வை மீறி ஒரு காரியம் நடக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்தும். இந்த முறை பூரணப்படும் பொழுது நம் உணர்வோடு தொடர்புள்ள நிகழ்ச்சிகளும் நம் உணர்வு மூலம் கட்டுப்படுவது தெரியும்.

தொடரும்...



## அன்பர் அனுபவம்

**V.** தேவகி, கடலூர்

**ஸ்ரீ அன்னையின் பாத கமலங்களே சரணம் !!**

ஸ்ரீ அன்னையின் அருளால் நான் பெற்ற அனுபவங்களை எழுத வார்த்தைகளும், வருஷங்களும் போதாது. ஏறக்குறைய 20 வருஷங்களாக ஸ்ரீ அன்னையை அறிந்த நாள் முதல் எனது துன்பங்கள் மாறி, சின்னச்சின்ன அபிலாசைகளையும் ஸ்ரீ அன்னை எதிர்பாராதவிதமாக நிறைவேற்றி வருகிறார்.

நம் அனுபவங்கள் அடுத்தவர்களுக்குச் சாதாரணமாகத் தோன்றினாலும், அவ்விஷயங்களில் அன்னையின் அருட்-தீண்டுதல் அரும்பியதால் அவை அனுபவிப்பவர்களுக்கு மனக்கஷ்டத்திற்கு மருந்தாகவும், நெஞ்சுக்கு உரமாகவும், ஞான வெளிச்சங்களாகவும் விளங்கக்கூடியவை. ஸ்ரீ கர்மயோகி அவர்களின் கீழ்க்கண்ட வரிகளின்படி நன்றியறிதலாக எனது இளைய மகளுக்கு கல்லூரியில் படிக்க இடம் கிடைத்த விஷயத்தை நினைவுகூர விரும்புகிறேன்.

**அனுபவம் விவேகமானால் ஆனந்தம் நன்றியாகும்.**

+2 படித்த பிறகு இன்ஜினியரிங் படிக்க விரும்பினாள். விண்ணப்பமும் செய்திருந்தாள். முற்படுத்தப்பட்ட வகுப்பு, மதிப்பெண்கள், தங்கிப் படிக்க பணச் செலவு எனப் பல விஷயங்கள் இருந்தாலும், அத்தனையையும் அன்னையிடம் சொல்லி வந்தேன்.

இன்ஜினியரிங் படிக்க இடம் கிடைத்தால் படிப்பது, இல்லை-யென்றால் திருச்சியில் உள்ள ஒரு கலைக் கல்லூரியில் படிப்பது என முடிவு எடுத்து அங்கும் விண்ணப்பித்து இருந்தாள்.

முதற்பட்டியல் வெளிவந்தது, பெயர் இல்லை. இரண்டாம் பட்டியலிலும் பெயர் வரவில்லை. சரி அன்னையின் விருப்பம் என திருச்சியில் உள்ள கல்லூரியில் சேர்ந்தாள்.

அன்னையின் விருப்பம் எதுவோ அதுவே நடக்கட்டும் என நான் நினைத்தாலும், ஒரு பெற்றவளாக, அவள் விரும்பிய படிப்பைப் படிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தையும் அன்னையிடம் சொல்லி, அவளுக்கு மனத் தெம்பைக் கொடுங்கள் எனவும் வேண்டி வந்தேன்.

கல்லூரியில் சேர்ந்த முதல் மாதம் வார விடுமுறைக்கு வீட்டிற்கு வந்தவள் மூன்று நாள் பிரார்த்தனையை மேற்-கொண்டாள். சிதம்பரம் வாகீச நகரில் இருந்த தியான மையத்திற்குச் சென்று **White Roses** என்ற புத்தகத்தையும் மூன்று நாட்கள் வாசித்தாள்.

சேர்க்கைகள் முடிவடைந்து இன்ஜினியரிங் கல்லூரி வகுப்புகள் தொடங்க இருக்கும் தருணத்தில், கோயம்புத்தூரில் உள்ள ஒரு இன்ஜினியரிங் கல்லூரியில் இருந்து அட்மிஷன் கார்டு வந்தது. சந்தோஷத்துடன் சென்று அந்தக் கல்லூரியில் சேர்ந்தாள். மதிப்பெண்கள் அடிப்படையில் இடங்கள் நிரப்பியபின், ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் - இவள் பாஸ்கெட் பால் பிளேயர் என்பதால் - இடம் கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் பின்பு தெரிந்தது. இனி இல்லை என்ற படிப்பை அன்னை நாம் அறியாமல், நமக்கு இருக்கும் சிறப்பை வெளிக்கொண்டு வந்து வாய்ப்பை உருவாக்கியதை உணர்ந்து தெளிந்தேன்.

இரு பெண்களையும் எப்படிக் கரையேற்றப் போகிறோம் என்ற நினைவு மேலிடும் போதெல்லாம் ஸ்ரீ அன்னையின் பாதங்களில் இரண்டு பேரையும் மானசீகமாக வைத்து இவர்களைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன்; தாங்கள்தாம் நல்ல வழிகாட்டவேண்டும் என பிரார்த்திப்பேன். இரு பெண்களுக்கும் திருமணங்கள் நல்ல முறையில் நடந்து இன்று நான் சந்தோஷமாக இருக்கிறேன்.

ஸ்ரீ கர்மயோகி அவர்களின் வார்த்தைகள் அனைத்தும் சத்தியம். ஆபத்து வந்தபோதெல்லாம் ஸ்ரீ அன்னையின் அருளால் காப்பாற்றப்பட்டோம். அன்னைக்குக் காணிக்கை வைத்து, செயலைச் சமர்ப்பணம் செய்து விடுவேன்.



ஆச்சரியப்படும் விதத்தில் அனைத்துப் பிரார்த்தனைகளும் நிறைவேறியுள்ளன. எனக்கு ஸ்ரீ அன்னையை அறிமுகப்-படுத்திய சகோதரி இல. சுந்தரி அவர்களுக்கும், அப்பா ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளும் நமஸ்காரங்களும் உரித்தாகுக.

ஸ்ரீ அன்னையே சரணம்.

அன்னையின் குழந்தை
V. தேவகி

## ஜீவிய மணி

*ஒரு புதிர் போட்டால் யாரோ ஒருவர் அதற்கு விடை கூறுவார். அவர் கூறிய பின் அனைவருக்கும் புரியும். விடையைக் கூறுபவர் முன்னோடி.*

**முன்னோடிகளால் உலகம் முன்னேறுகிறது. மற்றவர் முன்னோடிகளால் பயன் பெறுபவர்.**

*மனிதனுக்கு அடுத்த நிலையாக சத்திய ஜீவன் பிறப்பான் எனவும், அம்முயற்சிக்கு முன்னோடிகள் 100 பேர் தேவை எனவும் பகவான் கூறுகிறார். அது யோகம். மவுண்ட் எவரெஸ்ட் வாழ்க்கையின் சிகரம். நிரந்தர நிலையான அதிர்ஷ்டம். அன்னையின் அருளை நடப்பதற்கு முன் புரிந்தவர்க்கு அத்தகு நிலையான அதிர்ஷ்டம் கிட்டும். நடந்தபின் புரிந்து கொண்டாலும் பிரார்த்தனை பலிக்கும். வாழ்வு திருவண்ணாமலை மலை போன்றது. வருஷத்தில் 1000 பேராவது இம்மலை உச்சிக்குப் போகிறார்கள். பல ஆயிரம் பேர் உச்சிக்குப் போக முடியாததால் மலையைப் பிரதட்சணம் வருகிறார்கள். அனைவருக்கும் அதற்குரிய பலன் உண்டு.*

**நடந்தபின் புரிந்தாலும், நடப்பதற்கு முன் புரிந்தாலும் அனைவரும் அன்னைக்கு உரியவராவர்.**

*நடப்பதற்கு முன் புரிந்தால் நிரந்தர நிலையான அதிர்ஷ்டம் பெறலாம். அது மலையேறி உச்சியைத் தொட்டதாகும். நடந்தபின் புரிந்தால் பிரார்த்தனை பலிக்கும். அது பிரதட்சணம் செய்வது போன்றது.*

## பார்வைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 21. பூரணியின் பார்வை

அறுபது ஆன்மிகப் புத்தகங்கள் வாங்கி வந்தபின் அவற்றை வாசிப்பதற்கே சந்துருவிற்கு நேரம் போதவில்லை. பேச்சு வெகுவாகக் குறைந்துவிட்டது. அலுவலகத்திலிருந்து திரும்பி-யதிலிருந்து மறுநாள் அலுவலகம் போகும்வரை வாசிப்பில் ஆழ்ந்து வருவது சந்துருவின் வழக்கமாகிக் கொண்டு வந்தது.

தத்தாவும், வம்சியும் ஒரு ஞாயிறு மாலை வீட்டுக்கு வந்தனர். சந்துரு புத்தகங்களைப் பற்றி எதுவுமே கூறவில்லை என்றாலும் தத்தா கல்வியைப் பற்றிய புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தபடி இருந்தார். 'நீ வாசித்துவிட்டு கொடு. நான் இந்தத் தொகுதியை எடுத்துக்கொள்ள நாளாகும்' என்று சந்துரு கூறவும் தத்தா மகிழ்ச்சியோடு நூலை எடுத்துக்கொண்டார். வம்சி எந்தப் புத்தகத்தையும் தொடவில்லை. 'இவற்றை எங்கு வாங்கினாய்?' என்று மட்டும் கேட்டு கடை முகவரியைத் தெரிந்து கொண்டார்.

ஆண்கள் அலுவலகம் போனபின் எனக்கு வேலை எதுவுமே இல்லை என்பதால் புதிய புத்தகங்களை வாசிக்க என்னிடம் நேரம் நிறைய இருந்தது. எதிலிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. சந்துருவைப்போல வரிசைக்கிரமமாக வாசிக்க நினைக்காமல், கையில் கிடைத்த ஒரு தொகுதியை எடுத்துப் பிரிப்பேன். வந்த பக்கத்தில் கண்ணில் பட்ட வரிகளை வாசிப்பேன். நான் வாசித்த ஒவ்வொன்றையும், என் சொந்த வாழ்க்கையில் அனுபவமாக அறிய முயல ஆரம்பித்தேன்.

'இவன் தன்னுணர்வுள்ள ஒளிமயமான ஜீவன். கைக் கட்டைவிரல் உயரமுள்ளவன். நம்முள் இருக்கிறான். நெஞ்சின் நடுவே நின்று ஒளிர்கிறான். நம் காலங்களின் தலைவன்



இவனே. இன்று என்பதும் நாளை என்பதும் இவனே' என்று சைத்தியபுருஷனைப் பற்றி ஒரு நாள் கதா உபநிஷதம் கூறியது.

கருவுற்ற பெண் தன் குழந்தையின் இருப்பை வயிற்றில் உணர்கிறாள். தாய் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் தன்னிருப்பை குழந்தை உணர்த்திக்கொண்டே இருக்கும். சைத்தியபுருஷன் மௌனமாக மறைவாக அல்லவா இருக்கிறான்?

நெஞ்சிலிருக்கும் சைத்தியபுருஷனின் இருப்பை மனிதர்கள் அறிவதில்லை. அறிய முயல்வதுமில்லை. எது ஒன்றை அடைய இடைவிடாது ஆர்வத்துடன் முயல்கிறோமோ அதை அடைந்து, பின் அதாகவே ஆவோம் என்ற கூற்றால் பயனடைய வேண்டுமானால் முயற்சியை ஆரம்பிக்கவேண்டும்.

அந்தகன் இடைவிடாமல் பற்றிக் கொண்டிருக்கும் வழிக்கோல் போல ஆர்வம் என்னுடன் இருந்து கொண்டே இருக்கிறது. அதுமட்டும் போதுமா? அழைக்கவும் வேண்டும். என்னைப் பிறிதொன்றாக மாற்ற எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்து கொண்டே இருக்க வேண்டும். சமர்ப்பணம் செய்பவருக்குக் காலமோ, வெளியோ தடையல்ல. தான் மட்டுமேதான் தடை. நான் என்ன செய்ய வேண்டும் என்று நானே செய்த முடிவு சரியா, தவறா என்று சிந்திக்கவில்லை. அமைதி குலையவில்லை அதனால் சரியான பாதையில் போகிறேன் என்று என்னிதயம் கூறியது. அன்று முதல் என் உறக்கம் வேறு வகையானதாக மாறத் தொடங்கியது. உறக்கம் மாறவில்லை. நான் அதை உணரும் விதம் மாறத் தொடங்கியது என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

சந்துருவின் வாசிப்பு மிகவும் தீவிரமாக இருந்தது. வேறு எதிலும் கவனமில்லாமல் இருந்தார். ஒருநாள் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே சாப்பிடும்போது, தன் தட்டில் இருக்கும் தோசையை எடுப்பதற்கு பதிலாக அண்ணன் தட்டிலிருக்கும் தோசையை எடுத்தார். அண்ணன் தன் தட்டை நகர்த்தி வைத்துக் கொண்டார்.

‘ஏன் இப்படிக் கவனமில்லாமல் சாப்பிடுகிறீர்கள்? எதற்காக இப்படி ஓயாமல் வாசிக்கிறீர்கள்?’ என்று கேட்டேன்.

‘வேறென்ன? உருப்படியாக செய்ய வேறு வேலை இருந்தால்தானே!’ என்றார் அண்ணன்.

சற்று திகைத்த சந்துரு ‘எனக்கு ஆன்மிகப் புத்தகங்களை வாசிக்க மிகவும் பிடிக்கும்’ என்றார்.

நான் எதுவும் கூறாதிருந்தேன்.

‘பிடிக்காதவற்றை ஒதுக்கிவிட்டு பிடித்தவற்றை மட்டும் செய்தால் முழுமையை அடைய முடியாது. எல்லாக் காரியங்களையும் சமமாக பாவிக்க வேண்டும் என்கிறீர்களா?’ என்று கேட்டார் சந்துரு.

நான் புன்னகைத்தேன்.

‘ஒரே ஒரு ஆழ்ந்த அழைப்பு அல்லது ஒரே ஒரு தீவிர சமர்ப்பணம் அல்லது ஒரே ஒரு கனத்த அனுபவம் இத்தனை புத்தகங்களை வாசிப்பதைவிட மேலானது என்கிறீர்களா?’ என்றார் சந்துரு.

மேலும் புன்னகைத்தேன்.

‘பூரண ஞானம் நமக்குள் ஏற்கனவே இருக்கிறது. நாம் வெளியே வாசிப்பதெல்லாம் உள்ளே இருக்கும் ஞானத்தின் பிரதிபிம்பம்தான். அகத்தில் இருப்பதைத் தேடி அலைய வேண்டும். அதற்கு மேற்பரப்பு மனதிலிருந்து விலகி ஆழ்மனதிற்குச் செல்ல வேண்டும். சமர்ப்பணம் செய்து கொண்டே இருந்தால் மேற்பரப்பிலிருந்து அக ஆழத்திற்குச் செல்லலாம். இதைத்தானே சொல்கிறீர்கள்’ என்று சந்துரு புத்தகத்தை மூடி வைத்தார். ‘இவ்வளவு தெளிவாக நீங்கள் விளக்கிச் சொன்னதும் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குப் புரிகிறது பூரணி!’ என்றார் சந்துரு.

சாப்பிட்டு முடித்தபின் தோள்பையில் சில உடைகளை அலங்கோலமாக திணித்துக் கொண்ட சந்துரு, ‘அலுவலகம் போய்விட்டு அங்கிருந்து அப்படியே மதுரை போகிறேன்.



வங்கி தணிக்கை. திரும்ப இரண்டு நாட்கள் ஆகும்’ என்று கசப்புடன் கூறியபடி கிளம்பினார்.

‘கொஞ்சம் இருங்கள்’ என்று அவரது பையை பலவந்தமாக வாங்கி துணிகளைச் சரியாக அடுக்கித் தந்தேன்.

‘பிரயாணம் செய்வது என்றாலே உங்களுக்கு வருத்தம் வந்துவிடுகிறது’ என்றேன்.

‘மகாவெறுப்பு. கடுங்கசப்பு. என் அண்ணனும், தம்பியும் காலை ஆறரைக்கெல்லாம் மின்சார ரயிலில் மருத்துவமனைக்குப் போகிறார்கள். கூட்டநெரிசலே இல்லாமல் ஏதோ அவர்களது சொந்த வண்டியில் போவது போல போகிறார்கள். திரும்பும் போதும் அப்படித்தான். என் அலுவலகத்திற்கு மின்வண்டி கிடையாது. பஸ்ஸில் போகும் போதும் வரும்போதும் நசுங்கி வருகிறேன். அதனால் பஸ் பிரயாணம் என்றாலே பிடிப்பதில்லை’ என்றார் சந்துரு.

‘நீங்களும் நேரத்தை மாற்றிக் கொண்டு கூட்டமில்லாத வண்டியில் போக வேண்டியதுதானே? சரி உள்ளூர் பிரச்சனையை விடுங்கள். முன்பதிவு செய்து வசதியாக உட்கார்ந்து கொண்டு வெளியூர் போவதில் என்ன வெறுப்பு?’ என்று கேட்டேன்.

‘உள்ளூர் பஸ் நேரத்தை மாற்றிப் பார்த்துவிட்டேன். அதில் ஒரு பிரச்சனை வருகிறது. அதே பிரச்சனை வெளியூர் பிரச்சனையிலும் தொடர்ந்து வருகிறது’ என்றார் சந்துரு.

‘அப்படியென்ன பிரச்சனையோ?’ என்றேன்.

‘சொல்கிறேன். ஆனால் சிரிக்கக் கூடாது’ என்றார் சந்துரு.

‘சரி’ என்றேன். ஆனால் அப்போதே எனக்கு சிரிப்பு வர ஆரம்பித்துவிட்டது.

‘எப்போது பஸ்ஸில் போனாலும், பெண்கள் என்னை சீட்டிலிருந்து எழுப்பி விடுகிறார்கள்’ என்றார் சந்துரு.

’எதற்காக?’ என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

'அவர்கள் வசதியாக உட்காரத்தான். கால்கள் நீளமாக இருப்பதால் பல இருக்கைகள் எனக்கு வசதியாக இருக்காது. சில இருக்கைகளில் மட்டும்தான் என்னால் வசதியாக உட்கார முடியும்' என்றார் சந்துரு.

'உயரமாக இருப்பதில் இப்படி ஒரு பிரச்சனை இருக்கிறதா' என்றேன்.

'நான் எங்குப் போனாலும் தனியாகப் போகிறேன். வசதி-யான இடத்தில் உட்காருகிறேன். உடனே இரண்டு பெண்களோ, அல்லது ஒரு ஆணும், பெண்ணுமோ வருகிறார்கள். என்னை வேறு சீட்டிற்கு மாறச் சொல்கிறார்கள். பல வருஷங்களாக இப்பிரச்சனை இருக்கிறது. தினசரி உள்ளூர் பஸ் பிரயாணத்தைக் கூட பொறுத்துக் கொள்ளலாம். கொஞ்ச நேரம்தானே? வெளியூர் பிரயாணங்கள்தான் சிரமமானவை. வசதியான இடத்தில் உட்கார்ந்து பயணம் செய்து பல காலமாகிவிட்டது. என்னைப் பார்த்தால் எல்லோருக்கும் ஏமாளி போலத் தெரிகிறது' என்றார் சந்துரு.

'கஷ்டம்தான்' என்று கூறி சிரித்தேன்.

'மாதத்திற்கு மூன்று தடவையாவது தணிக்கைக்காக வெளியூர் செல்கிறேன். எங்கும் இதே பிரச்சனைதான். பஸ், ரயிலில் மட்டுமல்ல, ஒரு முறை டெல்லி போகும் விமானத்தில் கூட இருக்கை மாற்றி உட்கார வேண்டியதாகிவிட்டது. அந்தமானுக்குச் சிறிய கப்பலில் செல்லும்போது என் அறையையே பெண்களுக்காக மாற்றவேண்டி வந்தது' என்றார் சந்துரு.

'இதற்கு என்ன தீர்வு?'என்றேன்.

'பெண்களுக்காக விசேஷ வண்டி விடுவதுபோல, ஆண்களுக்கும் விசேஷ வண்டி விட வேண்டும் என்று ஒரு முறை இந்து பத்திரிக்கைக்குக் கடிதம் எழுதினேன். பிரசுரமாக-வில்லை. இப்போதெல்லாம் வண்டி காலியாக இருந்தாலும், நானாகவே வசதியே இல்லாத கடைசி சீட்டில் உட்கார்ந்து விடுகிறேன். அவமானப்படுவதைவிட கஷ்டத்தை பொறுத்துக்



கொள்வது எளிதாக இருக்கிறது. கர்மத்தை அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும் போலிருக்கிறது!' என்றார் சந்துரு.

'சென்னைக்குள் மோட்டார் சைக்கிளில் போகலாமே!' என்றேன்.

'சென்னை போக்குவரத்து நெரிசலில் அதைப் போன்ற அறிவற்ற செயல் இருக்க முடியுமா? அது அண்ணன் வண்டி. நான் விரும்பிய போதெல்லாம் கிடைக்காது' என்றார் சந்துரு.

'அதுவும் சரிதான். சதா கற்பனை உலகில் வேறு இருப்பீர்கள். ஆபத்துதான்' என்றேன்.

'பூரணி, நீங்களும் இன்று அலுவலகம் வாருங்களேன்' என்றார் சந்துரு.

'நானா!' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

'நான் பஸ்ஸில் எவ்வளவு சிரமப்படுகிறேன் என்பது உங்களுக்கு அனுபவத்தில் புரிய வேண்டாமா?' என்றார்.

வீட்டை பூட்டிக் கொண்டு கிளம்பினோம்.

நான் பஸ்ஸில் மிக அபூர்வமாகத்தான் பயணித்திருக்கிறேன். பஸ்ஸிலிருந்த மக்கள் திரளும், நெரிசலும் எனக்குத் திகைப்-பூட்டின. தினமும் இத்தனை சிரமப்பட்டா சந்துரு அலுவலகம் போகிறார். கடவுளே!

வெகு நேரம் காத்திருந்த பின், கூட்டம் சற்றே குறைவான பஸ் வந்தது. அதன் பொருள் ஒருவர் மீது ஒருவர் உராயாமல் நிற்கும் அளவிற்கு இடமிருந்தது என்பதே.

சந்துரு தலைக்கு மேலிருந்த ஒரு கம்பியை பிடித்துக் கொண்டார். நான் ஒரு சீட்டை ஒட்டி இருந்த செங்குத்துக் கம்பியின் மீது சாய்ந்து நின்று கொண்டேன்.

'கோவில் தூணில் செதுக்கியிருக்கும் தேவமங்கை போலிருக்கிறீர்கள்' என்றார் சந்துரு.

எனக்குச் சற்று கூச்சமாக இருந்தது, ஓரப்பார்வையால் சுற்றிலும் கவனித்தேன். சந்துரு சொன்னது எவர் காதிலும்

விழவில்லை. அப்படியே விழுந்தாலும் யார் பொருட்படுத்தப் போகிறார்கள். அவரவர் கவலை அவரவருக்கு. பொது இடத்தில் இப்படிப்பட்ட நேரடியான புகழ்ச்சியை நான் எதிர்பார்க்கவே இல்லை. சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால் நான் அதை வெளிக்காட்டவில்லை.

'இலக்கியவாதி என்றால் கொஞ்சம் கிறுக்குத்தனம் இருக்குமோ!' என்றேன்

'நான் பெரிய இலக்கியவாதி. பெரிய கிறுக்கு' என்றார் சந்துரு.

சிரித்தேன்.

சந்துரு 'திருவல்லிகேணி செல்ல குறைந்தது முக்கால் மணி நேரம் ஆகிவிடும்' என்றார்.

'அவ்வளவு நேரம் என்ன செய்வீர்கள்?' என்றேன்

'நான் வாசித்த கதைகளின் பாத்திரங்கள் வேறுவிதமாக நடந்து கொண்டிருந்தால் கதையின் போக்கு எப்படி மாறியிருக்கும் என்று யோசிப்பேன். நேரம் போவதே தெரியாது' என்றார் சந்துரு.

'நிஜ மனிதர்களைப் பற்றி யோசிக்க மாட்டீர்களா?' என்றேன்

'கனவில் நடப்பது கனவில் நிஜம்தானே? என் கதைகளில் நடப்பவை எல்லாமே என் மனதில் நிஜமானவைதான். என் கதாமனிதர்களோடு பேசுவேன். பழகுவேன். ஆனால் என்னை அறியாமலே நிஜ மனிதர்களைப் பற்றிய நினைவுகள் தாமாகவே வரும். இப்போது கூட திடீரென்று மாலதியின் நினைவு வருகிறது. அந்த நினைவில்தான் கோவில் தூண், தேவமங்கை என்று உங்களிடம் சொல்லிவிட்டேன்' என்றார் சந்துரு.

எனக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. அட. இவரைவிட நான் பெரிய கிறுக்காக இருப்பேன் போலிருக்கிறதே! வாய்விட்டுச் சிரித்தேன். அருகிலிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

'யாரது மாலதி?' என்று கேட்டேன்.



'பள்ளியில் பழக்கமானவள். எங்கள் வீட்டிற்கு அருகிலேயே இருந்தாள். அவள் பெண்கள் கல்லூரிக்குச் சென்றபின்னும் நட்பு தொடர்ந்தது. மிகவும் நல்லவள்' என்றார் சந்துரு.

'எதை வைத்துச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன்

'நான் சொல்லும் கதைகளை எல்லாம் ஆர்வத்தோடு கேட்பாள். நான் கிறுக்கலாக எழுதும் எல்லாவற்றையும் ஆர்வத்தோடு அழகான கையெழுத்தில் பிரதி எடுப்பாள்' என்றார் சந்துரு.

'அப்படியானால் மிக நல்லவள் என்ற பட்டத்தைத் தந்தே தீர வேண்டும்தான்' என்று கூறி சிரித்தேன்.

'நாமிருவரும் பஸ்ஸில் ஏறும்போதும் மாலதியோடு பஸ்ஸில் சென்ற நினைவு வந்தது. பல வருடங்களுக்கு முன் ஏதோ ஒரு கல்யாணத்திற்காக அவள் திருச்சி செல்ல வேண்டியிருந்தது. அவள் அப்பாவால் போக முடியவில்லை. என் உதவியைக் கேட்டார்' என்றார் சந்துரு.

'உடனே சரி என்று சொல்லி இருப்பீர்களே!' என்றேன்.

'ஆமாம். முடியாது என்றா சொல்வேன்? அன்று பஸ்ஸில் ஒரு பிரச்சனை ஆகிவிட்டது. நாங்கள் இரட்டை இருக்கைகளை முன்பதிவு செய்திருந்தோம். தலையில் முக்காடிட்டிருந்த ஒரே குடும்பத்துப் பெண்கள் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்களும் முன்பதிவு செய்திருந்தார்கள். ஆனால் ஒரு இளம் பெண்ணுக்கு மட்டும் கடைசி வரிசையில் நான்கு ஆண்களுக்கு நடுவே இருக்கை ஒதுக்கப்பட்டிருந்தது. அப்பெண் சீட்டை மாற்றிக் கொள்ளலாமா என்று என்னிடம் மிகவும் பணிவோடு கேட்டாள்' என்றார் சந்துரு.

'முடியாது என்று சொல்லி இருப்பீர்களே?' என்றேன்.

'எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?' என்றார் சந்துரு.

'பக்கத்து சீட்டு பளிங்குச் சிலையை விட்டு நகர மனம் வருமா? மேலே சொல்லுங்கள்' என்றேன்.

‘பொதுவாக நான் எவரிடமும் முரட்டுத்தனமாகப் பேசாதவன். அன்று தற்காலிக புத்தி மாறாட்டம் ஏற்பட்டு-விட்டது! அப்பெண்ணை அலட்சியமாகப் பேசினேன். நான்கைந்து முறை கேட்டுவிட்டு, வேறு வழியில்லாமல் தன் சேலைத் தலைப்பை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டு தன் சீட்டில் சென்று ஆண்கள் நடுவே உட்கார்ந்து கொண்டு-விட்டாள். என் வார்த்தைகளால் புண்பட்டுவிட்டாள் போலிருக்கிறது. வேறு எவரிடமும் உதவி கேட்கவில்லை. அப்பெண்ணை அப்போதே மறந்து விட்டேன்’ என்றார் சந்துரு.

‘மாலதியால் வந்த மாலை நேரத்து மயக்கம் எதை வேண்டுமானாலும் மறக்க வைக்கும்’ என்றேன்.

‘அந்த நிகழ்ச்சி பல வருஷங்கள் கழித்து இப்போதுதான் நினைவிற்கு வருகிறது. அவளது கண்களில் தேங்கிய கண்ணீர் இப்போது என்னைத் துன்புறுத்துகிறது’ என்றார் சந்துரு.

ஜெமினி மேம்பால நிறுத்தத்தில் பலர் இறங்கவும், பஸ் பாதி காலியாகிவிட்டது. நானும் சந்துருவும் உட்கார இடம் கிடைத்தது.

‘மேற்பரப்பில்தான் நான் நாகரிகமானவன். சந்தர்ப்பம் சாதகமாக இருந்தால் அநாகரிமாக நடந்து கொள்ளக் கூடியவன். அன்று நடந்ததை நினைத்தால் பதற்றமாக இருக்கிறது. பல வருஷங்களாகி விட்டன. இன்று என்னால் என்ன செய்ய முடியும்! ஒன்றும் செய்ய முடியாது!’ சந்துருவின் குரல் மெல்லுணர்ச்சியால் நெகிழத் தொடங்கியிருந்தது.

நான் சமையல்காரியாக இருப்பதை மறந்தேன். சந்துருவின் கைகளை மெல்லப் பற்றினேன். பொது இடம் என்பதை நான் பொருட்படுத்தவில்லை. சிறுகுழந்தையை சமாதானப்படுத்தும் தாயாக என்னை உணர்ந்தேன்.

‘இதற்கான பதில் எனக்கு ஏற்கனவே தெரியும் என்று சொல்கிறீர்களா?’ என்றார் சந்துரு.

நான் ஒன்றும் சொல்லவில்லை.



‘காலம் என்பது உள்ளத்தில் இருக்கிறது. காலண்டரிலோ, கடிகாரத்திலோ இல்லை. பெயர் தெரியாத அந்த பெண்ணின் வருத்தத்தை, அவமான உணர்ச்சியை என் உணர்ச்சியால் தொட்டுணர முடியும் என்கிறீர்கள்?’ என்றார் சந்துரு.

நான் மௌனமாக இருந்தேன்.

‘அந்த நிகழ்ச்சி இன்னும் ஜீவனோடுதான் இருக்கிறது. ஒவ்வொரு முறை நான் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதும் அது எனக்கு சேதி சொல்ல முயற்சி செய்து கொண்டே இருந்தது. நான்தான் கவனக் குறைவாக இருந்துவிட்டேன். அதனால் பாதகமில்லை. இப்போது அந்த நிகழ்ச்சியை உணர்வில் மீண்டும் வாழ்ந்து அந்தப் பெண்ணிற்கு சந்தோஷம் தர முடியும் என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது’ என்றார் சந்துரு.

அப்போதும் நான் மௌனமாகத்தான் இருந்தேன்.

சந்துரு ஜன்னல் வழியே தெரிந்த விரிந்த வானத்தை சிறிது நேரம் பார்த்தார். வானத்தைப் பார்க்க மனிதர்களுக்கு அபூர்வமாகத்தான் தோன்றுகிறது. ஜன்னலை பூட்டிக் கொண்டால்தான் பாதுகாப்பாக உணர்கிறோம். பெரியதில் கரைந்து விட சிறியது எப்போதும் அஞ்சுகிறது. அப்படி கரையும்போது தான் பெரியதாவதை ஏன் சிறியதால் உணர முடியவில்லை? முடியவில்லையா அல்லது விரும்ப-வில்லையா?

கண்களை மூடி தன்னுள் ஆழ்ந்த சந்துருவின் முகத்திலிருந்த இறுக்கம் மெல்ல மெல்ல விலகியது. அவர் கண்மலர்களில் தோன்றிய பனித்துளி உருண்டு, கன்னத்தில் கோடிட்டது. அக்கோடு கண்மலரின் நீண்ட காம்பு போலிருந்தது.

நான் புன்னகைத்தேன். நாங்கள் இறங்க வேண்டிய பஸ் நிறுத்தம் வந்து விட்டிருந்தது.

நாங்கள் அலுவலகத்தில் நுழைந்ததும், 'வழக்கம்போல பஸ் தாமதம் என்று பொய் சொல்லப் போகிறாய்?' என்று வரவேற்றார் ஆடிட்டர்.

'உண்மையிலே பஸ்தான் காரணம்' என்றேன்.

'நீங்கள் யார்?' என்று கேட்டார் ஆடிட்டர்.

நான் பதில் சொல்லும்முன் 'என் சொந்தக்காரப் பெண். நம் அலுவலகத்தைக் காட்ட அழைத்து வந்தேன்' என்றார் சந்துரு.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

காலையிலேயே சந்துரு தணிக்கை செய்யச் செல்ல வேண்டிய வங்கியின் மண்டல அலுவலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. 'தணிக்கைக்குச் செல்ல வேண்டாம். அவசர கூட்டம் கூடுகிறது. நேரில் உடனே வரவும்' என்றது.

தனியே அலுவலகத்தில் நான் என்ன செய்வது! நானும், ஆடிட்டரும், சந்துருவும், வம்சியும் காரில் சென்றோம்.

நான் வங்கி வரவேற்பறையில் காத்திருக்க, மற்றவர்கள் வங்கிக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டம் அரைமணி நேரத்தில் முடிந்து விட்டது.

ஆடிட்டர் உற்சாகமாக இருந்தார். 'அவசரக் கூட்டம் என்றதும் ஏதோ குற்றம் சுமத்தத்தான் கூப்பிடுகிறார்கள் என்று பயந்து விட்டேன். நல்ல விஷயம்தான். தணிக்கை சன்மானத்தை உயர்த்தி இருக்கிறார்கள். பல ஆடிட்டர்கள் சன்மானம், பயணப்படி எல்லாமே குறைவாக இருக்கிறது என்று தணிக்கை செய்ய வருவதே இல்லையாம். பல மாதங்களாக இந்த பிரச்சனை ஓடிக் கொண்டிருக்கிறது. இன்று நல்லபடியாக முடிந்தது' என்றார்.

'சாருக்கு நல்ல விஷயம்தான்' என்றார் வம்சி.

'என்ன அப்படி பிரித்துச் சொல்லி விட்டாய்? உங்களுக்கும் நல்ல விஷயம்தான். நீங்கள் எல்லோரும் இனி முதல் வகுப்பில் பிரயாணம் செய்யலாம். உள்ளூரில் வாடகை காரில் போகலாம்.



இதில் நீங்களும் கூடுதலாக சம்பாதிக்க வழி இருக்கிறது' என்றார் ஆடிட்டர்.

'முதல் வகுப்புப் பயணச் சீட்டு வாங்கி அதை போட்டோகாபி எடுத்துக் கொண்டு, பின் பயணச் சீட்டை ரத்து செய்து விட்டு, இரண்டாம் வகுப்பில் போக வேண்டும். பஸ்ஸில் போனாலும், காரில் சென்றதாக நாமே டிரைவரின் கையெழுத்தை ரசீதில் போட்டு விடவேண்டும். ஒவ்வொரு பயணத்திலும் ஆயிரக்கணக்கில் கூடுதலாக சம்பாதித்துவிடலாம்' என்றார் வம்சி.

'நீதாண்டா என் வாரிசு!' என்று மகிழ்ந்தார் ஆடிட்டர்.

'தணிக்கை செய்ய வேண்டிய நாமே இப்படி தகிடுதத்த வேலை செய்தால், நம் தொழிலுக்கே மரியாதை இல்லாமல் போய்விடும்' என்றார் சந்துரு.

'மரியாதையெல்லாம் நமக்கெதற்கு? பணம்தான் முக்கியம்' என்றார் ஆடிட்டர்.

'கொஞ்ச நாட்கள் அப்படிச் செய்ய முடியும். வங்கிக்குத் தெரிய வந்ததும், புதிய விதியைக் கொண்டு வந்துவிடும்' என்றார் சந்துரு.

'அதை முறிக்க நம் அறிவை கொஞ்சம் உபயோகப்-படுத்தினாலே போதும்' என்றார் ஆடிட்டர்.

'அப்படியெல்லாம் என்னால் செய்ய முடியாது. மாட்டிக் கொண்டால் கேவலம்' என்றார் சந்துரு.

'மாட்டிக் கொள்ள வாய்ப்பில்லை என்றால் செய்வாயா?' என்று கேட்டார் ஆடிட்டர்.

சந்துருவால் பதில் சொல்ல முடியவில்லை.

'உன்னைத் திருத்த என்னால் முடியாது. நீ இப்படியே பேசிக் கொண்டிருந்தால் ஆடிட்டர் தொழில் செய்ய முடியாமல், வேறு வேலைக்குப் போய்விடுவாய். படித்ததெல்லாம் வீணாகிவிடும். அடுத்தவர் பணத்தில் பிழைப்பது எப்படி என்று புரிந்து கொண்டு நல்ல புத்தியோடு இரு' என்றார் ஆடிட்டர்.

'சரி சார்' என்றார் சந்துரு பேச்சை முடிக்கும் உத்தேசத்தோடு.

'படைப்பு என்பது ஒளி - இருள், ஆண் - பெண், இன்பம் - துன்பம் போன்ற இருமைகளால் ஆனது என்று ஒரு கட்டுரையில் எழுதி இருந்தாயே! சட்டம் என்ற ஒன்றிருந்தால் சட்டமுறிப்பு என்ற ஒன்றும் இருக்கும். மனிதன் பிறப்பது இறக்கத்தான். இறப்பு இருந்தால்தான் வாழ்க்கைக்கு அர்த்தம் வருகிறது, இல்லையென்றால் வாழ்க்கை தேங்கி விடும். சட்டம் முறிந்தால்தான் அரசாங்கம் யோசித்து சட்ட சீர்திருத்தம் கொண்டுவரும் அல்லது புதிய சட்டம் கொண்டு வரும். யோசித்துப் பார். வரி சட்டம், கம்பெனி சட்டம் எல்லாமே கேலிக் கூத்து ஆவதால்தான், அந்தச் சட்டங்கள் காலத்திற்கேற்றபடி புதிதாக இருக்கின்றன. யாருமே முறிக்காத எத்தனையோ சட்டங்கள் இருநூறு வருஷங்களாக எந்த மாற்றமுமில்லாமல் பிரிட்டிஷ் மகாராணி போட்டபடியே இருக்கின்றன. சட்டமுறிப்பு அரசாங்கத்திற்கும், குடிமகனுக்கும் நடக்கும் போட்டி. முன்னேற்றம் வேண்டுமானால் போட்டி வேண்டும். ரஷ்யாவில் வியாபாரப் போட்டி இல்லாமல் இருந்தது. எல்லா பொருட்களும் தரங்கெட்டவையாகி விட்டன. பொதுவுடைமை சித்தாந்தமே அந்த நாட்டில் தோற்றுவிட்டது' என்றார் ஆடிட்டர்.

'சார், நீங்கள் உண்மையை லேசாகத் திரிக்கிறீர்கள். முழுப் பொய்யை விட அது ஆபத்தானது, அது தீய சக்தியின் வேலை' என்றார் சந்துரு.

'யார் இல்லை என்றார்கள்? சட்ட நிபுணக் கருத்து என்று சொல்கிறார்களே. அது சட்டத்தின் நோக்கத்தை நம் வசதிக்கு திரிப்பதுதானே? திரிப்பது மட்டும்தானா தீமை? சத்தியத்தை முறைப்படுத்துவது, நிறுவனமாக்குவது எல்லாமே தீமைதான். ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி ஒரு குட்டிக் கதை சொன்னார். சாத்தானும், அவன் உதவியாளனும் மேதை ஒருவனை கெடுப்பதற்காக அவர் வீட்டிற்குப் போனார்கள். அதே நேரத்தில், இறைவனின் அருளால் மேதையின் கைகளில் ஒளிமயமான ஒரு வைரக்கல் விழுந்தது. உதவியாளன் துடித்தான். 'மோசம் போய்விட்டோம். மேதையின் கைகளில்



தூயசத்தியம் சிக்கி விட்டது. அதை அவர் விடமாட்டார். இனிமேல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது' என்றான். 'மூடா! இப்போதுதான் நம் வேலை எளிதாகிவிட்டது. மேதை சத்தியத்தை உலகெங்கும் பரப்ப நாம் அவருக்கு உதவுவோம்' என்று சந்தோஷமாக சாத்தான் கூறினான். இத்தனை வருஷங்களாக விவேகானந்தர், வேதம், உபநிஷதம் என்று பிதற்றிக் கொண்டிருந்தாய். இப்போது திடீரென்று கொடி நிறத்தை மாற்றிக் கொண்டு ஸ்ரீ அரபிந்தோ என்கிறாய். அவர் லைப் டிவைனில் என்ன சொல்கிறார் என்றால் என்று ஆரம்பித்து உன் நண்பர்களுக்கு விளக்கம் தருகிறாய். உனக்கும், ஜேகே சொன்ன மேதைக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது? முதலில் வாழ்க்கையை அனுபவித்துப் புரிந்து கொள். எதையாவது சாதித்துக் காட்டு. புத்தகத்தை வைத்துக் கொண்டு வார்த்தை வித்தை காட்டிக் கொண்டிருக்காதே' என்றார் ஆடிட்டர்.

சந்துரு பதில் பேசவில்லை.

'சார், என்னை மதியம் ரத்தினம் வீட்டிற்குப் போகச் சொன்னீர்கள்' என்று பேச்சை மாற்றினார் வம்சி.

வம்சியிடம் 'ரத்தினம் வீட்டிற்கு என் காரிலேயே போய்வா. பெரிய இடம். பஸ்ஸில் போகாதே. எனக்குத்தான் கேவலம்' என்ற ஆடிட்டர் தொடர்ந்து 'உங்களில் ஒருவர் கூட சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருவதில்லை. வாடிக்கையாளர், அரசாங்க அலுவலகங்களுக்கும் தாமதமாகத்தான் போகிறீர்கள். கேட்டால் பஸ் தாமதமாக வந்தது என்ற பொய்தான் பதிலாக வருகிறது. சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை எதுவுமில்லாமல் இருக்கிறான் டிரைவர். நம் அலுவலகத்திற்காக ஒரு கார் வாங்கிவிட்டால் என்ன? என் காரை இப்போதே அலுவலக உபயோகத்திற்குத் தந்து விடுகிறேன். எனக்குப் புதிய கார் வாங்கிக் கொள்கிறேன். அதுதான் சரி. இனி நீங்கள் எல்லோரும் காரில்தான் வர வேண்டும், காரில்தான் போக வேண்டும். யாரும் என்னை ஏமாற்ற முடியாது' என்றார்.

அன்று மாலை நானும், சந்துருவும் அலுவலகக் காரில் வீடு திரும்பினோம். திரும்பும்போது ‘மாலதி என்ன ஆனாள்?’ என்று கேட்டேன்.

‘அவள் அத்தை மகனைக் கல்யாணம் செய்து கொண்டு லண்டனில் சந்தோஷமாக இருக்கிறாள். எங்கும் சொந்தக் காரில் போகிறாள். பெண்ணாக இருக்கிறாள். யாரும் அவளை சீட்டிலிருந்து எழுப்ப மாட்டார்கள்’ என்றார் சந்துரு.

‘விஷமம் பண்ணியது நீங்கள். அவளை ஏன் கேலி செய்கிறீர்கள்?’ என்றேன்

அன்றிரவு ஆடிட்டரும் மதுரை வருகிறேன் என்றதால், சந்துரு காரிலேயே மதுரை சென்று விட்டார். அதன்பின் சந்துரு பஸ்ஸில் சென்றதாக எனக்கு நினைவில்லை. இங்கிருந்து வேலையை விட்டுப் போகும்போது என் காரை சந்துருவிற்கு கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

(தொடரும்)

*(இக்கதைப் பற்றிய கருத்துக்களை அனுப்ப அல்லது தொடர்பு கொள்ள* **mj@motherservice.org** *என்ற மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தவும்)*

## ஜீவிய மணி

*நான் மனித உதவியை நாடப் போவதில்லை;*

*என் சொந்தத் திறமையையும் நம்பப் போவதில்லை;*

*எப்படி என்ன நடக்கும் என நினைக்கப் போவதில்லை;*

*நண்பர், உறவினர், பார்ட்னர், குடும்பம், குருவையும் நாடப்போவதில்லை;*

*இந்த நெருக்கடி வந்தபின், இது அன்னையை நெருங்கக் கிடைத்த சந்தர்ப்பம் என*

**அன்னையை மட்டும் நம்புகிறேன்.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# மரபும் ஸ்ரீ அரவிந்தமும்

யோகம் கற்கும் ஆசிரமங்களைப் பள்ளிக்கூடத்திற்கோ, கல்லூரிக்கோ ஒப்பிட்டால் இதுவரை செய்த யோகங்கள் பிரபல ஆசிரியர்கள் நிறைந்த ஸ்தாபனங்கள். ஸ்ரீ அரவிந்தம் கற்பிக்கும் யோகம் பூரண யோகம். மரபின் வாழ்வை நாமறிவோம். பகவான் கூறுவது தெய்வீக வாழ்வு. பழைய வாழ்வு பிரபல ஆசிரியர்கள் நிறைந்த பள்ளி போன்றது. ஸ்ரீ அரவிந்தம் கூறும் தெய்வீக வாழ்வு மேதைகள் கற்பிக்கும் பள்ளி போன்றது. மேதைகள் எழுதிய பாடங்களை ஆசிரியர்கள் கற்பித்துப் பிரபலமாகிறார்கள். ஒரு பள்ளியில் இராமானுஜம் கணித ஆசிரியராகவும், கம்பர் தமிழாசிரியராகவும், ஷேக்ஸ்பியர் ஆங்கில ஆசிரியராகவும், வியாசர் சமஸ்கிருத பண்டிதராகவுமிருப்பது போன்றது ஸ்ரீ அரவிந்தம் கூறும் தெய்வீக வாழ்வு.

மரபு சிறியது. ஸ்ரீ அரவிந்தம் பெரியதல்ல,
அனந்தமானது.
மரபு காலம்; ஸ்ரீ அரவிந்தம் சாஸ்வதம்.

# மனிதனும் வானிலையும்

நெடுநாள் முன் மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தபொழுது அவன் வாழ்வை இயற்கை பாராட்டி ஆதரித்தது. இன்றைய மனநிலை ஏற்கக்கூடியதில்லை. உண்மை என ஒன்றிருந்தால் அது ஆன்மிக உண்மை. அதன்படி அனைத்தும் பிரம்மம். புயலும் பூகம்பமும் உலகமறிந்த விபத்துகள். மழை பெய்ய பசுமையான காடுகள் தேவை என நாம் படிக்கிறோம். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மழை வேண்டி நடனமாடுவர். மழை பெய்யும். படமெடுப்பவர் சிலர் பாலைவனத்தில் இதுபற்றிக் கேள்விப்பட்டு ஆதிவாசிகளை நடனமாட வேண்டினர். அதற்குரிய நேரத்தில் செய்யலாம். நினைத்துச் செய்ய முடியாது என்றனர். அதிக வேண்டு-கோளுக்கு இசைந்து முறைப்படி சாஸ்த்ரோக்தமாக 1 மணி அனைவரும் நடனமாடினர். 20 மணி நேரத்திற்குப் பின் லேசாக ஆரம்பித்த மழை 1 வாரம் பெரு மழையாகி தரையில் 1 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கியது. வானிலை இலாக்கா அந்த மாதம் எப்படி மழை பெய்யும் என வியந்தது.

மனமும் வானமும் சேர்ந்து மகிழ்ந்த நேரம்
வானம் சொன்னபடி கேட்கும்.
மனமும் வானம் சொற்படி நடக்கும்.